# அச்சாரம்
# ACCHARAM

பல்சுவை மாத இதழ்
Tamil Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர் -9 | இதழ் - 8 | மார்ச் 2025 | விலை ரூ.15/- |
| Volume - 9 | Issue - 8 | March 2025 | Price Rs.15/- |





FROM THE WRITER OF METRO
உலகமெங்கும்
மார்ச்
14
வெளியீடு
ரபர்
SM PANDI
KAVITHA.S & ANANDA KRISHNAN
ANANDA KRISHNAN
JOHAN SHEVANESH NS UTHAYA KUMAR SRIKANTH NB
ANANDA KRISHNAN, SM PANDI P SARVANAN MFA METRO MAHESH
HARI KIRAN LAXMI NARAYANAN AS
ARUN BHARATHI A, LOGAN, JOHAN SHEVANESH, MADRAS MIRAN, SARATHI C SETHU
SIVAKUMAR KAMARAJ THIRAI NIDHI SELVAM
GUNA AMUTHAN IGENE SIVA SHANKAR V PRINCE JOHN BABLOO MACGUFFIN
SHYAM, ARUN RANDY, PREM, N VISHAL, ANOOP ARASAN, MANJUNATH NAGARAJAN, GOWTHAM KM



# ஆசிரியர் பக்கம்


## அச்சாரம்

மலர் - 09 இதழ் -8 மார்ச் 2025

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**M.C.சேகர் B.E.,**

இணை ஆசிரியர்கள்
P.ரஞ்சித்குமார், பாலகுமார்சோமு, ,
சே.உமா,

துணை ஆசிரியர்கள்
T.மதுராஜ், A. NANDAN
R.சரண்குமார் B.E., A.E.SELVAM
A.K.MUTHU,

கௌரவ ஆசிரியர்
M.SIVAKUMAR

பொறுப்பாசிரியர்
M.திரவியப்பாண்டியன் M.A., L.L.B.,

சிறப்பாசிரியர்
R.K அன்பழகன்,
T.அன்பழகன்,

முதன்மை நிருபர் - ஆலோசகர்
பாப்பனப்பட்டு வ.முருகன்

நிருபர்கள்
A.சரவணன்
B.P.முன்னா

புகைப்படக் கலைஞர்
K.சுரேஷ் B.Tech.,

சட்ட ஆலோசகர்கள்
K.செந்தூரபாண்டி B.Sc.,B.L.,
C.காசிவிஸ்வநாதன் B.Sc., B.L.,
P.பாலசுப்பிரமணியம் B.A., B.L.,

வடிவமைப்பு:
4 மீடியா டிசைன்ஸ் @ 7871696917



SF1, 2nd Floor, 5/10, Anna Colony,
Virugambakkam, Chennai - 600 092.
**Cell: 9444153340**
E-mail: accharam2016@gmail.com


அனைத்து வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டு வருபவர்களுக்கும் முதல் வணக்கம். மார்ச் 1ல் வெளிவரும் அச்சாரம் 9ஆம் ஆண்டின் 8ஆம் இதழை உங்கள் ஆதரவோடு தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க வாசகர்கள் சந்தாவை செக்காக அனுப்பியது மட்டுமில்லாமல் சந்தா தொகையினை வங்கியிலும் கட்டி ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து உங்கள் ஆதரவை நல்கும்...

**M.C.சேகர்** B.E., *ஆசிரியர்*
*செல்:* **9444153340**

# இராசுக்குட்டி பதில்கள்

மற்றவர்களுக்கு உதவலாமா?
-வி.கோகிலவாணி, திண்டிவனம்

1896 ஆம் ஆண்டில், மின்சார விளக்கைக் கண்டு பிடித்த, சிறந்த கண்டுபிடிப்பாளரான தாமஸ் ஆல்வா எடிசன், ஒரு காரை வடிவமைக்கும் யோசனையில் வேலை செய்து கொண்டிருந்தார்.
அவர், தம்மிடம் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் ஓர் இளைஞன், ஒரு சோதனைக் காரை உருவாக்கியிருப்பதைக் கேள்விப்பட்டார்.
எடிசன், ஹென்றி ∴போர்டு என்ற, அந்த இளைஞனை, நியூயார்க்கில் நடந்த, தனது நிறுவனத்தின் பார்ட்டியில் சந்தித்து, அந்தக் கார் பற்றி கேட்டறிந்து, அவனது ஐடியாக்களால் ஈர்க்கப்பட்டார்.
அந்த இளைஞனைப் போலவே, அவருக்கும் ஒரு காரை வடிவமைக்கும், அதே யோசனை இருந்தது. எடிசன், மின்சார ஆற்றல் மூலமாக அந்தக் காரை இயக்கும் ஐடியாவில் இருந்தார். ஆனால், அந்த இளைஞன், காரை இயக்குவதற்கு, பெட்ரோல் எஞ்சினைப் பயன்படுத்தப் போவதாகக் கூறினான்.
அவர், ஆச்சர்யத்தில் தனது கையை மேஜை மீது குத்தி, ”இளைஞரே, அபாரம். உண்மையில் உனது யோசனை சிறப்பானது. வெற்றிக்கான வி'யங்கள் அனைத்தும் உன்னிடம் உள்ளது. நீங்கள் பெரிய வெற்றி பெறுவீர்கள்...” என்றார்.
அந்த நேரத்தில், அமெரிக்காவில் மிகவும் மதிக்கப்படும், கொண்டாடப்படும் கண்டுபிடிப்பாளரின் இந்த ஊக்கமூட்டும் வார்த்தைகளால், ஹென்றி ∴போர்டு தனது வேலையைத் தொடர்ந்தார். ஒரு காரைக் கண்டுபிடித்தார். பிறகு, ஒரு கார் தொழிற்சாலையைத் தொடங்கினார். பெரும் பணக்காரரும் ஆனார்.
டிசம்பர் 9, 1914 அன்று, எடிசனின் ஆய்வகம் மற்றும் தொழிற்சாலை தீக்கிரையானது. அவர், 67 வயதானவர், மற்றும் காப்பீட்டுத் தொகையும் போதுமானதாக இல்லை.
எரியும் சாம்பல் அடங்கும் முன், ஹென்றி ∴போர்டு, 7,50,000 டாலர்களுக்கான காசோலையை எடிசனிடம் கொடுத்தார். ”உங்களுக்கு மேலும் தேவைப்பட்டாலும், உதவ நான் இருக்கிறேன்...” என்று கூறிச் சென்றார்.

1916 ஆம் ஆண்டில், ஹென்றி ∴போர்டு, தனது வீட்டை, எடிசனின் வீட்டிற்கு அடுத்த கட்டிடத்திற்கு மாற்றினார்.



சிறிது காலத்தில், எடிசன் நடக்க முடியாமல், சாய்வு நாற்காலியில், அவரது மருத்துவர்களால் உட்கார வைக்கப்பட்ட போது, ஹென்றி ∴போர்டு, தனது வீட்டில் ஒரு சக்கர நாற்காலியை வாங்கினார்.
தனது நண்பர் மற்றும் வழிகாட்டியான அவருக்காக, அவர் அங்கும் இங்கும் நகர வேண்டும் என்பதற்காக, தமது வீட்டில் பெரிய அறையை நிறுவினார்.
எடிசன், ஹென்றி ∴போர்டுக்கு, அவரது பலத்தை உணர்த்தினார். அவர்மீது ஹென்றிக்கு நம்பிக்கை வர காரணமாக இருந்தார். அதனால், வாழ்நாள் முழுவதும் தமக்கான ஒரு நல்ல நண்பரைப் பெற்றார்.
மற்றவர்களின் வெற்றியைக் கண்டு பொறாமை கொள்ளாதீர்கள். உங்களால் பந்தயத்தில் வெற்றிபெற முடியாவிட்டால், சாதனையை முறியடிக்க உங்களுக்கு முன்னால் ஓடுபவர்களுக்கு உதவுங்கள்.
உங்கள் மெழுகுவர்த்தி, மற்றொரு மெழுகுவர்த்தியை ஏற்றும் போது, அதன் ஒளியை இழக்காது. அதனால், மற்றவர்களுக்கு எந்த வகையிலாவது உதவிக் கொண்டே இருங்கள்.

வாழ்க்கைக்குப் பயன்படும், நல்ல அறிவுரை ஒன்று கூறுங்களேன்...
-வி.வி.மூர்த்தி, புதுச்சேரி

ஒரு காட்டில், கரையான்கள் ஒன்று கூடி, ஒரு புற்றைக் கட்டுவது என்று தீர்மானித்தன. அதற்கான இடத்தைத் தேர்வு செய்து, புற்றுக்கு உகந்த மண்ணைத் தேர்ந்தெடுத்து, புற்றைக் கட்டத் தொடங்கின.

அந்த இடத்திற்கு ஒரு பாம்பு வந்தது. கரையான்கள் கடுமையாக வேலை செய்வதைப் பார்த்தது. அன்றிலிருந்து, கரையான்கள் வேலை செய்யும் இடத்திற்கு வருவதையும், வேடிக்கைப் பார்ப்பதையும் வழக்கமாக வைத்திருந்தது.

இப்படியே ஒரு வருடகாலம் சென்றது. கரையான்கள் புற்றைக் கட்டி முடித்தன.

பாம்பு, "கரையான்களே... நீங்கள் கட்டிய புற்று அருமையாக இருக்கிறது. நான் ஒருமுறை உள்ளே சென்று பார்க்கட்டுமா?"" என்று கேட்டது.

கரையான்கள் சம்மதித்தன. பாம்பு, அந்தப் புற்றுக்குள்ளே சென்று பார்த்தது. பாம்பு வெளியேவரும் என்று கரையான்கள் காத்திருந்தன. அது வெளியே வரவில்லை. கரையான்கள் வெளியிலிருந்து பாம்பைக் கூப்பிட்டன.

அதற்குப் பாம்பு, "புற்று வசதியாக இருக்கிறது. இனி இது என்னுடையது. வேண்டுமென்றால், நீங்கள் இன்னொரு புற்றைக் கட்டிக் கொள்ளுங்கள். இங்கிருந்து கிளம்புங்கள். இல்லையென்றால், என் வி'த்துக்கு இரையாவீர்கள்..." என்று மிரட்டியது.

சோகத்தோடு கிளம்பின கரையான்கள். வழியில், ஒரு சாதுவை சந்தித்து, நடந்தவற்றைச் சொல்லி வருத்தப்பட்டன.

சாது, பாம்பிடம் பேசினார். "பாம்பே! புற்றை உருவாக்கிக் கொள்ளும் ஆற்றல் உனக்கில்லை. அடுத்தவன் உழைப்பை திருடுகிறாயே, இது சரியா? அடுத்தவன் உழைப்பை, உன் பலத்தால் பெறுவது நியாயமல்ல..." என்றார்.

உடனே பாம்பு, "சாதுவே! உலகத்தில் பலசாலிகள் வைத்தது தான் சட்டம் என்பது உங்களுக்குத் தெரியாதா? ப லசாலியிடம் நியாயத்தை எதிர்பார்ப்பதும் முட்டாள்தனம்..." என்று சொல்லிவிட்டு நகர்ந்தது.

கரையான்கள் அழுதுகொண்டே அந்த இடத்தைவிட்டு நகர்ந்தன. சாதுவும் நகர்ந்தார்.

சில மாதங்கள் சென்றன. பாம்பு, தனது குடும்பத்தோடு, புற்றில் வசதியாக வசித்து வந்தது.

ஒரு நாள் பாம்பு, தனது குட்டிகளோடு புற்றுக்கு வெளியில் திரிந்து கொண்டு இருந்தது. அப்போது அங்கு வந்த பருந்து, பாம்பைக் கொத்திக் கொண்டு பறந்தது. குட்டிகள் கதறின. வானத்தில் பறந்து கொண்டிருந்த பருந்து, பொத்தென்று பாம்பைக் கீழே போட்டது.

பாம்பு விழுந்த இடம், சாதுவின் ஆசிரம வாசல். உயிர் பிரியும் தருவாயில், சாதுவிடம் பேசியது பாம்பு.

"சாதுவே! நான் இல்லாமல், என் குட்டிகளால் வாழ முடியாது. ஆகவே, என்னைக் காப்பாற்றுங்கள்..." என்று கெஞ்சியது.

அதற்கு சாது, "பாம்பே! விதி சொல்லிக் கொடுக்கும் பாடம் ஒன்றைத் தெரிந்துகொள். வலிமை, பலம் என்பது நிரந்தரமல்ல. இன்று எவற்றையெல்லாம் பலமாக உணர்கிறாயோ, அவற்றையெல்லாம் நாளை பலவீனமாக உணர்வாய். அதேபோல, இன்று பலவீனமாக பார்க்கப்படுபவை, பலமாக மாறும் காலமும் வெகு தொலைவில் இல்லை...

"ஆகையால், பலவானாக இருக்கும் போது பக்குவமாகவும், பிறருக்குக் கெடுதல் செய்யாமலும் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால், நீ அப்படி வாழவில்லை. கரையான் என்ற, வலிமையில்லாத எதிரியை நீ தேர்ந்தெடுத்தாலும், பருந்து என்ற பலமான எதிரிக்கு, பதில் சொல்லும் நிலைக்கு காலம் உன்னை தள்ளியிருக்கிறது...

"பாம்பே! நிதர்சனமான ஒரு உண்மையைத் தெரிந்துகொள். அடுத்தவரை வருத்தி, அதை ரசிக்கும் உன் குணத்தை, இந்த உலகம் வேண்டுமானால் மறந்து போகலாம். ஆனால், நீ கீழே விழும்போது, காலம் அதை உன் நினைவில் கொண்டு வரும். அப்போது அதை தாங்கும் சக்தி, உனக்கோ, உன் சந்ததிகளுக்கோ இருக்காது. உன் சந்ததிகள் உன் பாவத்தைப் பங்காக பிரித்துக் கொள்வார்கள்..." என்று சொல்லிவிட்டு சென்றார்.

அதற்குப் பிறகு பாம்பு என்ன செய்தது என்பது உங்களுக்கு முக்கியமல்ல. காரணம், காலம் அதை, தன் பிடியில் எடுத்துச் சென்றுவிட்டது.

பலம் பொருந்திய ஒருவனின் அராஜகம், அகந்தை, கோபம் ஆகியவற்றை, காலம் ஒருநாள் எடுத்துச் சென்றுவிடும். அப்போது உணர்ந்து பார்க்கலாம் என்றால், காலம் அதற்கு இடம் தராது.

## முயற்சியின் பலன் என்ன?

-வே.நாராயணன், ஓசூர்

முயற்சியாளர் ஒருவரின் அனுபவத்தை, அவர் கூற்றிலேயே தெரிந்து கொள்ளுங்கள்.

"30 வருடத்திற்கு முன்பு, நிட்டிங் மீன் (பின்னலாடை உற்பத்தி இயந்திரம்) போடலாம் என்று, இரண்டு மூன்று பேரிடம் கேட்டேன்... "நாங்களே வந்த விலைக்கு எடைக்கு மீன்களை விற்கலாம் என்று இருக்கிறோம்... வேண்டுமானால் சொல்லுங்கள், பகுதி விலைக்குத் தருகிறோம்..." என்று கூறினார்கள்.... சரி வேண்டாம் என்று, அந்த முயற்சியை விட்டுவிட்டேன்...

ஆப்செட் பிரிண்டிங் மெஷின் போடலாம் என்று, இரண்டு மூன்று பேரிடம் கேட்டேன்... "இனி எல்லாம் கம்ப்யூட்டர் மயம் தான்... இதற்கெல்லாம் எதிர்காலமே கிடையாது... நாங்களே இதை விட்டுவிட்டு, வேறு வேலைக்குப் போகலாம்னு இருக்கோம்... அத்தனைக் கஷ்டம்... ஆர்டர்களே கிடைப்பதில்லை..." என்று கூறினார்கள். சரி, இதுவும் வேண்டாம் என்று விட்டுவிட்டேன்.

எலக்ட்ரிக் கடை, பெயிண்ட், இரும்புக் கடை போடலாம் என்று, இரண்டு மூன்று பேரிடம் கேட்டேன்... "கடன் வாங்கிட்டு அப்படியே போயிடறாங்க... கடன் கொடுக்கலைன்னா, விற்க முடியவில்லை... நாம தான் சொத்தை வித்து, வாங்கின பொருளுக்கான கடனை அடைக்க வேண்டும் போல இருக்குது... இந்தப் பொழப்புக்கு, கட்டட மேஸ்திரி வேலைக்கு போயிடலாம்னு இருக்குது..." என்று சொல்லவே, வம்பே வேண்டா மென்று, அந்த முயற்சியையும் விட்டுவிட்டேன்...

ஆனால், அதற்குப் பின்பு ஆரம்பித்த நிட்டிங் மிஷின், ஆப்செட் பிரிண்டிங், பெயிண்ட், இரும்பு, எலக்ட்ரிக் கடை-கள் எல்லாமே, மிகச் சிறப்பாக, பெரிதாக வளர்ந்திருந்தது.

ஆக, தோல்வியுற்றவர்களிடம் போய்க் கேட்டால், அப்படித் தான் சொல்வார்கள்... வெற்றியடைந்தவர்களைப் பார்த்தால் தான், அதில் உள்ள பிரகாசமான வாய்ப்புகள் தெரியும்... மேலும், ஒரே தொழிலில் இருப்பவர்கள், இன்னொருவர் போட்டியாக வருவதற்கு விரும்ப மாட்டார்கள்... அவர்களிடம் போய் ஆலோசனை கேட்பதும் தவறு.

எல்லோரும், எல்லா இடங்களிலும், வெற்றி பெற முடியாது. ஒவ்வொரிடமும் தனித் திறமையும், ஒவ்வொரு குணாதிசயமும் இருக்கும். அதைப் பொறுத்தே, அவர்களின் வெற்றி தோல்விகள் அமையும்.

"டி மார்ட், ஜியோ ஸ்மார்ட் கடைகள் வந்துவிட்டன, இனி மளிகைக் கடைகள் எல்லாம் அவ்வளவு தான், ஓடாது" என்று கூறினார்கள். ஆனால், உள்ள□ரில் இருக்கும் சிறு சிறு கடைகளில், இன்னும் வியாபாரம் அருமையாக நடந்து கொண்டு தான் இருக்கிறது.

மிகப்பெரிய பிரமாண்டமான துணிக் கடைகள், நகைக் கடைகள் இருக்கும் இடங்களுக்கு அருகில் தான், சிறிய கடைகள், மிக அருமையாக, நிம்மதியாக வியாபாரம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அந்தக் கடைகளுக்கு செல்லும் வாடிக்கையாளர்கள், இந்தக் கடைக்கு வர மாட்டார்கள்... இந்தக் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள், அந்தக் கடைக்கு செல்ல மாட்டார்கள்... அப்படியே சென்றாலும், அது மிகச் சிறிய அளவில் தான், தற்காலிகமாகத் தான் இருக்கும்.

பிரச்னைகள் இல்லாத, போட்டிகள் இல்லாத தொழில் என்று, எதுவும் இல்லை. எப்போதுமே, "இனி நம் தொழில் அவ்வளவு தான், முடிந்துவிட்டது, என்பது போல வரும் எதிர்மறை கருத்துக்களை காதில் வாங்கவே கூடாது.

முயற்சி செய்து கொண்டே இருந்தால், மிக உச்சத்துக்கு போக முடியா விட்டாலும், கண்டிப்பாக, நிம்மதியான வருமானம் கிடைத்துக் கொண்டு தான் இருக்கும்.

## அப்பா என்ற உறவு, எவ்வளவு உன்னத மானது என்பதை விளக்க முடியுமா?

-ஆ.மகிழினி, சிதம்பரம்

நான் சொல்வதை விட, என் நண்பர் ஒருவர், எனக்கு எழுதிய கடிதத்தைப் படித்துப் பாருங்கள்... அப்பாவின் உன்னதம், உங்களுக்கே புரியும்.

"அப்பா மாறவேயில்லை. யாரோட அப்பா எல்லாம் இந்த மாதிரி இருக்காங்க?

பனிரெண்டு வருடங்களுக்கு முன்னால் இன்ஜினியரிங் முடித்து விட்டு, பணிக்காக சென்னைக்கு வந்தேன். எனக்கு வேலை கிடைத்த புதிதில், நான் வாங்கிய முதல் மாத சம்பளம், 8000 ரூபாய். அதுவும், அந்த மாதத்தின் 7 ஆம் தேதி தான் போடப்படும்.

அப்படி முதல் மாத சம்பளம் பேங்கில் போடப் பட்டதும், தலைகால் புரியவில்லை. வீட்டிற்குப் போன் செய்தேன். அப்பா தான் எடுத்தார். அவரிடம் நான், அதிகமாகப் பேசுவதில்லை. மெல்லியதாக குசலம் மட்டும் விசாரித்து விட்டு, "உங்களுக்கு எதாச்சும் வேணுமா?" என்றேன். அப்பா, பதில் சொல்லவில்லை.

"அம்மாட்ட பேசு..." என்றவாறே, போனை அம்மாவிடம் தந்து விட்டார். நானும் அம்மாவிடம், "பாத்தியா, நான் ஏதாவது வேணுமான்னு அப்பாட்ட கேக்கேன், பதிலே சொல்லல... இவரெல்லாம்..." என்று துவங்கி, அப்பாவை சிறிது வசை பாடிவிட்டு, மற்ற கதைகளை, (அந்தக் கதைகளை எழுபத்தியெட்டு முறை அம்மாவிடமே சொல்லியிருந்தாலும், எழுபத்தி ஒம்பதாவது முறையும், முதல் தடவை போலக் கேட்பாள், அம்மா) பேசிவிட்டு, போனை வைத்து விட்டேன்.

ஓரிரு நாட்கள் கழித்து, என் வங்கிக் கணக்கை எதேச்சையாகப் பார்த்தேன். அந்த அக்கவுண்ட், என் கல்லூரி காலத்தில் இருந்து, நான் பயன்படுத்துவது. என் அப்பா, என்

செலவுக்காக என்று, அதில் தான் பணம் போடுவார். பணியில் சேர்ந்த தகவலும், சம்பள விவகாரங்களும், அப்பாவிற்கும் தெரியும். அதனால், இனி மாதச் செலவுக்காக, அதில் பணம் போட மாட்டார் என நினைத்திருந்தேன். அதோடு, இனி அப்பா காசு நமக்கெதுக்கு என்ற, ஆணவமும் என் தலையில் ஏறிக் கொண்டதால், அந்த வங்கிக் கணக்கைப் பார்க்கவில்லை.

முதல் மாதச் சம்பளம் வாங்கி, அது தீரும் நிலை வந்து, பழைய அக்கவுண்ட்டில் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், அதில் வழக்கம் போல, அந்த மாதமும் 30 ஆம் தேதியே, ஐயாயிரம் ரூபாய் போட்டிருந்-தார். அதற்கடுத்த மாதங்களிலும் இதுவே தொடர்ந்தது.

அது மட்டுமின்றி, அந்த வருடமும், வழக்கம் போலவே, தீபாவளிக்கும், பொங்கலுக்கும், என் பிறந்த நாளுக்கும், நான் வீட்டிற்கு வரும் முன்னமே துணிமணிகள் எடுத்து வைக்கப்பட்டிருந்தது. கையில் கொஞ்சம் காசு வந்தவுடன், நான் தான் மாறியிருந்தேன். அப்பா மாறவேயில்லை.

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும், தந்தை அன்பின் முன்னே. இது நிதர்சன வரிகள்.

ஒரு கட்டத்தின் வெளித் தோற்றம் அம்மா. பார்க்க அழகாக இருப்பார். வீடும் அப்படித் தான் இருக்க வேண்டும். ஆனால், அந்த வீட்டின் அஸ்திவாரம் அப்பா. அதன் பலன், வெளியே தெரியாது. ஆனால், உறுதியாக இருக்கும்.

நான் போகும் பாதை எல்லாம், என் தந்தை போட்டு வைத்தது, எனை சேரும் செல்வம் எல்லாம் அவர் பார்த்து விதைத்தது.

கையில் கொஞ்சம் காசு வந்தவுடன் நான் தான் மாறியிருந்தேன். அப்பா மாறவேயில்லை. இது போல் ஆயிரம் அப்பாக்கள்.

## வாழ்க்கையில் எதிரிகளும் அவசியமா?

-எஸ்.ஆறுமுகம், திருவண்ணாமலை

நாம் எதிரிகளே இல்லாத வாழ்க்கை வாழ விரும்புகிறோம். அது தவறு. எதிரிகள் நமக்குப் பல வி'யங்களைக் கற்றுத் தருவார்கள். அவற்றை நாம் கற்றுக் கொண்டால் தான், பலம் பெற முடியும்.

கபீர்தாஸ் என்ற துறவி, ஷஎதிரிகள் தான் எனக்கு ஆசான்கள். என்னை நானே திருத்திக் கொண்டு, நான் முழுமையாக மனித வாழ்க்கை வாழ, அவர்கள் என்னைத் தூண்டுகிறார்கள். அதனால், எதிரிகள் இல்லாத உலகத்தில் நான் வாழ விரும்பவில்லை' என்றார்.

இந்தக் கூற்று, மனிதர்கள் அனைவருக்கும் பொருந்தும். நமக்கு எதிரிகள் இல்லாவிட்டால், நமது குறைகளே நமக்குத் தெரியாது. எந்த நேரம் நம்மைப் பற்றி என்ன விமர்சனம் வருமோ என்று, நாம் விழிப்புடன் இருக்க, நமது எதிரிகள் தான் உதவுகிறார்கள். அதனால், நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும், நமக்கு விழிப்புணர்வு ஏற்படுகிறது.

நம்மையும் சிலர் உற்று நோக்குகிறார்-கள் என்ற எண்ணம், நம்மை ஒவ்வொன்றிலும் சிறப்பாகச் செயல்பட வைக்கிறது. அந்த வகையில், நம் திறமைகளைப் பெருக்கிக் கொள்ள, எதிரிகள் ஒரு தூண்டுகோலாக இருக்கிறார்கள்

நம் ஒவ்வொருவருக்கும், எப்போதும் ஒரு தூண்டுகோல் தேவை. நாம் எங்கேயாவது சோர்ந்து உட்கார்ந்து விடாமல் இருக்க, அந்தத் தூண்டுகோல் தான் உதவுகிறது.

எதிரிகளே இல்லாத அரசனுக்கு, வெற்றி என்பது கிடையாது. அப்படிப்பட்டவர் களுக்கு, சரித்திரத்திலும் இடம் கிடையாது.

ஒரு அரசனின் அத்தனை புகழுக்கும் காரணம், அவரது எதிரிகள் தான். ஒருவரது வீரமும், விவேகமும், எதிரிகள் முன்னிலையில் தான் பறை சாற்றப்படுகிறது.

அப்படியானால், எதிரிகள் மதிப்பிற்கு உரியவர்கள் தானே!

எதிரிகளை சந்திக்கத் தயாராக இல்லாதவர்களால், வெற்றியை எட்டவே முடியாது.

பெரிய தொழிலதிபர்களிடம் கேட்டால், அவர்கள் எதிரிகளைப் பற்றித் தான் நிறைய தெரிந்து வைத்திருப்பார்கள். அவர்களைப் பற்றித் தான், நிறைய கதைகளைச் சொல்வார்கள்.

நாடகக் கொட்டகையில் டிக்கெட் கிழித்துக் கொண்டு இருந்தவர், உலகம் போற்றும் நாடக எழுத்தாளரானது, அவரது எதிரிகளால் தான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

அவர், ஒரு நாடகத்தைப் பார்த்து விட்டு, சகட்டு மேனிக்கு விமர்சனம் செய்தார். அதனால் கடுப்பா-கிப் போன பிரபல நாடக நடிகர், “உனக்கு என்ன தெரியும்? நீ என்ன பெரிய நாடக எழுத்தாளரா?“ என்ற கேள்வியை எழுப்பி, அவரை குறை சொன்னார்.

அந்த எதிரியால் தான், அவருக்குள்ளே இருந்த எழுத்தாளர் வெளிப்பட்டார். அவர் யார் தெரியுமா? அவர் தான், ே'க்ஸ்பியர்.

ஆனால், ஒரு உண்மையை எல்லோரும் ஒப்புக் கொண்டு தான் ஆக வேண்டும். யாராலும் எதிரிகளை நேசிக்க முடியாது.

அவர்களை அழைத்து, உங்களால் தான் நான் உயர்ந்தேன் என்று, விருந்து வைக்கவும் முடியாது.

அதே நேரத்தில், அவர்களை நினைத்து, மன அழுத்தம் ஏற்படுவதையாவது தவிர்க்கலாம்.

எதிரிகள் என்பவர்கள், தோற்கடிக் கப்பட வேண்டியவர்கள் அல்ல. உணர்ந்து கொள்ளப்பட வேண்டியவர்கள். எதிரிகளை இதுவரை உணரவில்லை என்றால், தேடுங்கள். அவர்கள் கற்றுக் கொடுக்கும் பாடங்களைப் படிக்க ஆரம்பியுங்கள்.

எதிரிகளை நினைத்து வேதனைப்படாமல், தற்போது இருப்பதை விட சிறப்பாக அவர்கள் முன்னால் வாழ்ந்து காட்டுவேன் என்று, உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். அப்படி உறுதி எடுத்துக் கொள்ளும் போது, பலவிதமான புதிய வழிகள் தோன்றும். முயற்சி நம் முன்னே வந்து நிற்கும். அதுதான் வெற்றிக்கான வழி.

நாம் செய்யும் செயல்களில், எப்படியும் குறைகள் இருக்கத் தான் செய்யும். நம்மைச் சுற்றியிருக்கும் நண்பர்கள், அந்தக் குறைகளைக் கூறத் தயங்குவார்கள். ஆனால், அந்தக் குறைகளை, எதிரிகள் தயங்காமல் கூறுவார்கள்.

அதை நினைத்து வருத்தப்படாமல், குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சி செய்வோம் என்றால், நம்மை நாமே செம்மைப்படுத்திக் கொள்ளலாம்.

தர்ம சிந்தனை நல்லதா?

-வி.ஆதித்யா, கடலூர்

பெண்மணி ஒருத்தி, தினந்தோறும் இலையில் இரண்டு இட்லிகளை வைத்து, யாரேனும் எடுத்துக் கொள்ளட்டும் என்று, தினமும் வீட்டு சுற்றுச் சுவர் மேல் வைப்பாள்.

அவ்வழி திரியும் ஒரு கூனல் முதுகுக் கிழவன், அதை எடுத்துக் கொண்டு, ஏதோ முனகிக் கொண்டே போவான்.

இது அன்றாட வழக்கமாயிற்று.

ஒரு நாள், மதில் அருகிலேயே நின்று, கிழவன் என்ன முனகுகிறான் என்று செவிமடுத்துக் கேட்டாள்.

அவன் முனகியது, இதுதான்: "நீ செஞ்ச பாவம், உங்கிட்டே-யே இருக்கும்ளூ நீ செஞ்ச புண்ணியம், உன்னிடமே திரும்பும்".

தினந்தோறும் இதையே சொல்லிக் கொண்டு போனான்.

தினமும் இட்லி வைக்கிறேன்ளூ எடுத்துட்டு போறான்ளூ "நீ மவராசி, நல்லா இருக்கணும்"னு கையெடுத்துக் கும்பிட்டு, கை, காலல விழல்லைனாலும், "இட்லி நல்லா இருக்கு"ன்னு பாராட்டலைன்னாலும், "ரொம்ப நன்றி தாயே"ன்னு சொல்லக் கூடவாத் தோணல? ஏதோ, "நீ செஞ்ச பாவம், உங்கிட்டேயே இருக்கும்ளூ நீ செஞ்ச புண்ணியம், உன்னிடமே திரும்பும்"னு, தினம் தினம் உளறிட்டுப் போறானே" என்று எண்ணி எண்ணி புலம்பினாள், அவள்.

"இவன் என்ன பித்தனா? இல்ல, சித்தனா? பரதேசிப் பய" என்று திட்டினாள்.

நன்றி கெட்ட கூனனை நினைத்து, மன உளைச்சலுக்கு ஆளானாள். நாளடைவில் அவளது கோபம் தலைக்கேறி, கொலை வெறியாக மாறியது.

ஒருநாள், இட்லியில் வி'ம் கலந்து, செத்துத் தொலையட்டும் என, மதில் மேல் வைக்கப் போனாள். மனம் ஏனோ கலங்கியதுளூ கை நடுங்கியது.

"அவன் அப்படி இருந்தாலும், சே...நாம் ஏன் இப்படியாகணும்" என்று, அந்த வி'ம் கலந்த இட்லியை, சாக்கடையில் எறிந்து விட்டு, வேறு நல்ல இட்லியை மதில் மேல் வைத்துவிட்டு, மனம் அமைதியானாள்.

வழக்கம் போல் கூனல் கிழவன் வந்தான். இட்லியை எடுத்துக் கொண்டு, வழக்கம்போல, "நீ செஞ்ச பாவம், உங்கிட்டேயே இருக்கும்ளூ நீ செஞ்ச புண்ணியம், உன்னிடமே திரும்பும்" என்று சொல்லிக் கொண்டே சென்றான்.

அவனை அப்படியே அறையலாம் போலிருந்தது, அந்தப் பெண்மணிக்கு.

அன்று மதியம் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு, கதவைத் திறந்தாள்ளூ வாசலில் வாலிபன் ஒருவன், கசங்கிய உடையோடு தள்ளாடியபடி நின்றிருந்தான்.

வேலையோடு தான் திரும்புவேன் என்று சொல்லி விட்டு, ஒரு மாதம் முன்பு, வேலை தேடி வீட்டை விட்டுச் சென்ற, அவளது ஒரே மகன் தான் அவன்.

"அம்மா, வீட்டுக்குத் திரும்பி வரும்போது, என் பர்ஸ் காணாமப் போச்சுளூ கையில காசு இல்ல... தெரிஞ்சவங்க யாரும் கண்ணுல படல... மணிக் கணக்கில நடந்து வந்துட்டே இருந்தேன்... நல்ல வெய்யில்ளூ அகோரப் பசி வேறுளூ மயங்கி விழுந்துட்டேன்... கண் முழிச்சு பாத்தப்போ, யாரோ ஒரு கூனல் முதுகுக் கிழவன், என்னைத் தூக்கி உட்கார வச்சு, ரெண்டு இட்லி கொடுத்து சாப்பிடச் சொன்னான்... இட்லி சாப்பிட்ட பிறகு தான் எனக்கு உசுரே வந்தது".

இதைக் கேட்டதும், பேயறைந்தது போல் அதிர்ச்சி அடைந்தாள்.

"விஷம் கலந்த இட்லியை கூனனுக்குக் கொடுத்திருந்தால், அது என் மகனுக்கே எமனாக ஆகியிருக்குமே, ஆண்டவா!" என்று நினைத்து, தாய் உள்ளம் பதைபதைத்ததுளூ கண்கள் பனித்தன.

"நீ செஞ்ச பாவம், உங்கிட்டேயே இருக்கும்ளூ நீ செஞ்ச புண்ணியம், உன்னிடமே திரும்பும்" என்ற, கூனனுடைய முனகலின் பொருள், இப்போது நன்கு புரிந்தது.

உண்மைதான். எல்லாருக்கும் எல்லாம் அவ்வப்போதே புரிவதில்லை. புரியும் வேளையில், வாழ யாரும் இருப்பதும் இல்லை.

செய்த தர்மம், என்றும் நம்மை, ஏதாவது ஒரு ரூபத்தில் காக்கும். தர்மம் செய்யும் சிந்தனையை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறந்த தர்மம், முகம் கோணாது செய்யப்படும் தர்மமே.

# 100 கோடி பட்ஜெட்டில் பிரம்மாண்டமாக உருவாகும் “மூக்குத்தி அம்மன் 2“ திரைப்படம்!!

வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் & ஐவி என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில், இயக்குநர் சுந்தர் சி இயக்கத்தில், நயன்தாரா நடிக்கும் “மூக்குத்தி அம்மன் 2“ பிரம்மாண்டமாகத் துவங்கியது !

1 கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்டமாக நடைபெற்ற “மூக்குத்தி அம்மன் 2“ திரைப்பட பூஜை !

100 கோடி பட்ஜெட்டில் பிரம்மாண்டமாக உருவாகும் “மூக்குத்தி அம்மன் 2“ திரைப்படம்!!

தமிழ் திரையுலகின் முன்னணி படத் தயாரிப்பு நிறுவனமான வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் மற்றும் ஐவி என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில், அவ்னி சினிமேக்ஸ் (பி) லிமிடட் நிறுவனம் மற்றும் ரௌடி பிக்சர்ஸ் நிறுவனம் இணை தயாரிப்பில் கமர்ஷியல் கிங் இயக்குநர் சுந்தர் சி இயக்கத்தில், நடிகை நயன்தாரா நடிப்பில் “மூக்குத்தி அம்மன் 2“ திரைப்படம் பிரம்மாண்டமாக உருவாகவுள்ளது.

1 கோடி ரூபாயில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட அரங்கில், படக்குழுவி-னருடன், திரைப்பிரபலங்கள் கலந்துகொள்ள, இப்படத்தின் பூஜை, தமிழ் சினிமா இதுவரை கண்டிராத வகையில், மிகப்பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இந்நிகழ்வினில் ... உட்படப் பல முன்னணி பிரபலங்களுடன், படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் லிமிடெட் (Vels Film International Limited) நிறுவனத்-தின் டாக்டர் ஐசரி கே. கணேஷ், மற்றும் ஐவி என்டர்டெயின்மென்ட் (Ivy Entertainment) இணைந்து, முதல் பாகத்தை விட பல மடங்கு பிரம்மாண்டமாக, இப்படத்தை 100 கோடி பட்ஜெட்டில் தயாரிக்கிறார்கள்.

தனது தனித்துவமான காமெடி எண்டர்டெயினர் படங்கள் மூலம், திரையுலகைச் செழிக்க வைப்பதுடன், ரசிகர்களைத் தொடர்ந்து



மகிழ்வித்து வரும் கமர்ஷியல் கிங் இயக்குநர் சுந்தர் சி. இப்படத்தை இயக்குகிறார். இப்படம் அழுத்தமான கதையுடன், வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் காமெடி எண்டர்டெயினராக உருவாகவுள்ளது. இயக்குநர் சுந்தர் சி, நயன்தாரா இருவரும் முதல் முறையாக இணைந்திருப்பது, ரசிகர்களிடையே பெரும் உற்சாகத்தையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

நயன்தாரா முதன்மை வேடத்தில் நடிக்கும் இப்படத்தில் துனியா விஜய், ரெஜினா கஸண்ட்ரா, யோகிபாபு, ஊர்வசி, அபிநயா, ராமச்சந்திர ராஜு, அஜய் கோஷ், சிங்கம்புலி, விச்சு விஸ்வநாத், இனியா, மைனா நந்தினி ஆகியோர் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கு இசையமைப்பாளர் ஹிப் ஹாப் தமிழா ஆதி இசையமைக்கிறார். தொழில் நுட்ப குழுவில், கோபி அமர்நாத் ஒளிப்பதிவு, ஃ பென்னி ஆலிவர் எடிட்டிங், வெங்கட் ராகவன் வசனம், கலை இயக்கம் பொன்ராஜ், சண்டைப் பயிற்சி ராஜசேகர் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

பரபரப்பான ஆக்சன், வலுவான கதைக்களம், நகைச்சுவை கலந்து ஒரு அற்புதமான திரை அனுபவமாக இப்படம் உருவாகவுள்ளது.

## பெண் பத்திரிகையாளர் கவிதாவின் தயாரிப்பில் , பெண்கள் பிரச்னைகளை மையமாக கொண்டு உருவாகியிருக்கும் படம் ராபர்.

பெண் பத்திரிகையாளர் கவிதாவின் தயாரிப்பில் , பெண்கள் பிரச்னைகளை மையமாக கொண்டு உருவாகியிருக்கும் படம் ராபர். இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் (07.03.2025) அன்று நடைபெற்றது. இவ்விழாவில் திரையுலக நட்சத்திரங்கள் கலந்து கொண்டு பேசியதாவது : நடிகை தீபா பேசும்போது,

இந்த படத்தில் நடித்ததில் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் எழுதுவதில் தான் நாங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு தாய் தன் மகனுக்கு தாய்ப்பால் ஊட்டி வளர்ப்பாளோ அதே தாய் மகன் தடம் மாறினால் என்ன செய்வாள் என்பதை பல படங்களில் பார்த்திருக்கிறோம். அதை இந்த படத்தில் அழுத்தமாக கூறியிருக்கிறார்கள். இந்த கதாபாத்திரத்தை கொடுத்த இயக்குனருக்கு நன்றி.

இசையமைப்பாளர் ஜோகன் பேசும்போது,

கண்டு நேசிப்பவர்களை விட காணாமல் நேசிப்பவர்கள் பாக்கியவான் என்று கூறுவார்கள். அதுபோல இங்குள்ளவர்களின் படங்கள், பாடல்கள், சூழ்நிலைகள், நடிப்பு என்று சிறுவயதிலிருந்தே எங்களுக்கு ஊக்கமளித்தது. இங்கு வந்து எங்களை வாழ்த்தியதற்கு நன்றி. இப்படத்தை வெளியிடும் சக்தி அண்ணனுக்கு நன்றி. கவிதா என் உடன்பிறவா சகோதரி. அவர் எடுத்த முதல் குறும்படத்தில் இசையமைக்க வாய்ப்பு கொடுத்தார். அதிலிருந்து சிறிய படம், பெரிய படம் என்ற பாகுபாடு இல்லாமல் ஆதரவாக இருக்கிறார். நீண்ட கால நண்பர் ஆனந்த கிரு'ண்ன் மற்றும் இயக்குனர் பாண்டிக்கும் நன்றி. இசையைக் கேட்டு பாடல்களுக்கு கருத்து கூறுங்கள். இன்று சிம்பொனி இசையமைக்கும் ராஜா சாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று பேசினார்.

நடிகர் சத்யா பேசும்போது

நான் பாலு மகேந்திராவின் மாணவன். அவர் தான் என்னை பத்திரிகையாளர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். இன்று என்னுடன் அவர் இல்லை. ஆனால், தியாகராஜன் சார், பாக்யராஜ் சார், அம்பிகா மேடம், ரம்பா மேடம் இந்த மேடையில் இருக்கிறார்கள். இவர்கள் மூலமாக பாலுமகேந்திரா சாரை பார்க்கிறேன். அவரிடம் நடிப்பு கற்றுக் கொண்டு பல கம்பெனிகளில் ஏறி இறங்கியிருக்கிறேன். ஆனால், பெரிதாக வாய்ப்பு கிடைக்கவில்லை. கவிதா அக்கா சிறுவயதில் டியு'ன், பள்ளி, கல்லூரி அனைத் திலும் சேர்த்து விட்டார். பாலுமகேந்திரா சாரிடமும் மாணவராக




அவர் தான் அறிமுகப்படுத்தினார். அதேபோல், அக்கா தான் ஆனந்த் அண்ணாவிடமும் இவன் என்னுடைய தம்பி, உபயோகப்படுத்த முடிந்தால் உபயோகப் படுத்தி கொள் என்றார். அதன்பிறகு, மெட்ரோ படத்தில் எதிர்மறையான பாத்திரம் கொடுத்தார். கோடியில் ஒருவன் படத்தின் போது, ராபர் படத்தைப் பற்றி ஒரு வரி கூறினார். எனக்காகவும், அவருடைய இணை இயக்குனர் பாண்டிக்காகவும் எழுதப்பட்ட கதை தான் ராபர்.

சக்தி ஃபிலிம் ஃபேக்டரி சக்திவேலன் பேசும்போது,

இந்த படத்தின் தயாரிப்பாளர் கவிதா பத்திரிகையாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர், தயாரிப்பாளர் என்று பல அவதாரம் எடுத்திருக்கிறார். அவர் எப்போதும் முதல் வரிசை அல்லது அதற்கு அடுத்து வரிசையில் தான் அமர்ந்திருப்பார். அங்கிருந்து கொண்டு என்ன தான் பேசுவாய்?! இந்த படம் என்ன தான் செய்து விடும் என்று எகத்தாளமாக பார்த்துக் கொண்டே இருப்பார். பொதுவாக ஒரு படம் வெளியாக தயாரான நிலையில், விழா எடுப்பார்கள். அப்போது அனைவரும் அவர்களுக்கான விழாவாக மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஆனால், முதலில் பதட்டமாக இருப்பது தயாரிப்பாளர் தான். அதற்கு அடுத்து விநியோகஸ்தர் தான். நாம் பேசுவதையும், படத்தையும் எல்லாரும் கவனித்துக் கொண்டிருப் பார்கள். என்ன சொல்ல போகிறார்கள் என்ற நடுக்கம் இருக்கும். ஆனால், கவிதா எப்படி இருக்கிறார் என்று கவனித்தேன். அவர் ஜாலியாக ஊக்கமளித்து பேசினார்.

ஒரு படம் வெற்றியடைய அப்படத்தைப் பற்றி ப த்திரிகையாளர்கள் நல்ல விதமாக எழுத வேண்டும் என்ற அழுத்தம் இருக்கும். ஆனால், சக பத்திரிகையாளர் தயாரிப்பாளராக ஆனவுடன் பெரிய மக்கள் தொடர்பாளர்கள் அனைவரும்

தங்களது ஆசீர்வாதத்தை படத்திற்கும், தயாரிப்பாளருக்கும் கொடுத்திருக்கிறார்கள்.

எம்.ஜி. ஆர். காலகட்டத்தில் இருந்து இருக்கும் மக்கள் தொடர்பாளர் திரை நீதி செல்வம் அவர்களை இந்த படத்திற்கு மக்கள் தொடர்பாளராக இருக்க வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். தியாகராஜன் சார், பாக்கியராஜ் சார், அம்பிகா மேடம், ரம்பா மேடம் இவர்கள் பல வருட காலங்களாக பல மேடைகளை பார்த்திருப்பார்கள். அவர்களின் ஆசீர்வாதம் இந்த படத்திற்கு கிடைத்திருப்பது மிகப்பெரிய மகிழ்ச்சி.

அந்த காலத்தில் கல்யாண வீடுகளில் ஹிந்தி பாடல்கள் தான் ஒலித்துக் கொண்டிருக்கும். இளையராஜா காலத்திற்கு பின்பு தான் தமிழ் பாடல்கள் ஒலிக்க ஆரம்பித்தது. அது போல நிகழ்ச்சியை தமிழ் மொழியை மட்டும் பேசாமல் நடுவில் பல ஆங்கில வார்த்தைகளை கலந்து தொகுத்து வழங்கினால் தான் ரசிக்கும் படியாக இருக்கும் என்பதை உடைத்து விட்டு, அழகு தமிழால் மேடையை தன்வசப்படுத்திக் கொள்கிறார் கவிதா. அது மிகவும் சந்தோ'மாக இருக்கிறது.

மெட்ரோ படத்தை பிடித்தவர்களுக்கு ராபர் படமும் பிடிக்கும். படத்தை பார்த்தேன், மிகவும் அருமையாக எடுத்திருக்கிறார்கள். இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் ஆகியவற்றை ஆனந்த கிருஷ்'ணன் எழுதியிருக்கிறார். பாண்டி இயக்கியிருக்கிறார். ஜே பி சார் கதாபாத்திரம் வலிமையாக இருக்கிறது. தீபா அக்காவை நகைச்சுவை பாத்திரமாகவே பார்த்திருப்போம். ஆனால், இந்த படத்தில் அழுத்தமான அம்மாவாக பார்த்தோம். ஒவ்வொரு கதாபாத்திரமும் தனித்தனியாக சிறப்பாக இருக்கிறது.

தொழில் பின்னணியில் உள்ள குடும்பத்தில் இருந்து வந்துருக்கிறார் நாயகன் சத்யா. பாலுமகேந்திராவிடம் இயற்கையாக நடிப்பு கற்றுக் கொண்டு வந்துருக்கிறார். மெட்ரோ வெற்றியடைந்த பிறகு அவசரமாக அடுத்த படம் நடிக்காமல் அந்த குழுவுடனேயே பயணித்து கொண்டிருக்கிறார். மெட்ரோ மாதிரி படத்தை நேர்த்தியாக எடுத்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்றால் ஜெய் கார்த்திக் அண்ணா 26 மணி நேரம் உழைப்பார். நல்ல மனிதர்கள் என்று சிலரை பார்த்திருப்போம். ஆனால் இவர் மிக நல்ல மனிதர். அவருடன் பழகும் போது இது தெரியும்.

விழா நாயகன் பின்னணி இசை மற்றும் பாடல்களை சிறப்பாக இசையமைத்திருக்கிறார். சின்னத் திரையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் சோபியா. இந்த படத்தில் அவருடைய கதாபாத்திரம் சிறியதாக இருந்தாலும் சிறப்பாக நடித்திருக்கிறார். அனைவரின் ஆசீர்வாதத்துடன் இந்த படம் வெற்றி அடைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என்றார்.

நடிகர், இயக்குனர் தியாகராஜன் பேசியபோது,

கவிதா என்னிடம் வந்தபோது சின்ன பெண். அவரிடம் இருந்த வேகமும், துடிப்பும். இவர் வேறு ஒரு தளத்திற்கு செல்லும் ஆள் என நான் நினைத்ததுண்டு. அதன் பின் அவர் ஒவ்வொரு துறையாக மாறி, பத்திரிகையாளர், சென்சார் போர்ட் மெம்பர் என இப்போது தயாரிப்பாளராக இருப்பது ஒரு அப்பா ஸ்தானத்தில் இருந்து பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இது அனைத்து பெண்களையும் ஊக்குவிக்கும் ஒரு விஷயமாக பார்க்கிறேன். இப்படத்தின் ட்ரைலரை பார்த்தேன் மிக சிறப்பாக இருந்தது. இம்ப்ரெஸ் பிலிம் மேக்கர்ஸ் ஒரு இம்ப்ரெஸ்ஸிவான ட்ரைலரை செய்திருக்கின்றனர். மேலும் இப்படத்தை சக்தி பிலிம் பேக்டரி சக்திவேல் விநியோகம் செய்கிறார் என்பது கூடுதல் மகிழ்ச்சி. காரணம், அவர் சிறந்த படங்களை மட்டுமே விநியோகம் செய்வார். இப்படத்தில் நடித்த சத்யா மற்றும் அத்தனை கலைஞர்களும் சிறப்பாக நடித்துள்ளனர். அழகான ஒளிப்பதிவு, இசை என படத்தில் பணியாற்றிய அனைவரும் சிறப்பாக தங்கள் வேலையை செய்துள்ளனர்.

கவிதா மேலும் பல படங்களை தயாரிக்க வேண்டும். அவர் சொன்னது போல் நிறைய சிறிய தயாரிப்பாளரர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் மிக நல்ல எண்ணம். தாணு சார் இங்கு இருக்கிறார், அவர் பலருக்கு உதவி செய்திருக்கிறார். கவிதாவுக்கு தொகுப்பாளராக பல வாய்ப்புகளை வழங்கியுள்ளார். பாக்யராஜ் சாரின் படங்களை நாங்கள் சிறுவயதில் கண்டு மகிழ்ந்திருக்கிறோம். அதே போல் அம்பிகா, ரம்பா என அனைவரும் இங்கு கவிதாவை வாழ்த்த வந்திருக்கிறார்கள் என்றால் அது கவிதாவின் மீதுள்ள பிரியம் தான் காரணம். இவர்கள் அனைவருக்கும் நன்றி. கவிதா மேலும் பல சின்ன பட்ஜெட் படங்கள் எடுக்க வேண்டும். பத்திரிகையாளர்கள் அனைவரும் இந்த படத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் நன்றி, என்றார்.

நடிகை அம்பிகா பேசியபோது,

அனைவருக்கும் வணக்கம், இந்த விழாவுக்கு அழைத்த கவிதாவுக்கு நன்றி. எனக்கு நிறைய

பத்திரிகை நண்பர்கள் உள்ளனர். அவர்களை இங்கு சந்திப்பதில் மகிழ்ச்சி. எனக்கு பிடித்த பலரில் ஒருவர் தான் கவிதா. ஒரு பெண்ணாக இருந்து படத்தை தயாரித்திருக்கிறேன் என்று அவர் சொன்னது எனக்கு பெருமையாக இருந்தது. தியாகு சொன்னது போல், சிறிய படங்கள் பெரிய அளவில் வெற்றியடைய வேண்டும். ஆனால் இந்த படம் எனக்கு சிறிய படமாக தெரியவில்லை. ஒரு பெரிய பட்ஜெட் படத்திற்கு செய்ய வேண்டிய செலவை குறைத்து இந்த படத்தை ஒரு பெரிய படமாக தான் தயாரித்திருக்கிறார். இந்த படத்தின் ட்ரைலரில் வரும் ஒரு வசனம் இங்க இருக்க எல்லாரும் கெட்டவங்க தான். அதுல ரெண்டு ரகம். ஒன்னு மாட்டிக்கிறவுங்க, இன்னொன்னு மாட்டிக்கா தவங்க" என்ற வசனம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது என்று நான் கவிதாவிடம் சொன்னேன். அதுமட்டு மல்லாமல், இந்த கதைக்காக அவர்கள் தேர்வு செய்துள்ள கதாபாத்திரங்களும், நடிகர்களும் மிகவும் பொருத்தமாக இருந்-தார்கள். இதில் நடித்துள்ள அனைவருக்கும் வாழ்த்துக்கள். இப்படத்தை மிகப்பெரிய வெற்றிப்படமாக்க வேண்டும் என்பது நண்பர்களாகிய உங்கள் அனைவரின் கைகளில் உள்ளது. இதை ஒரு கடமையாக எடுத்து இப்படத்தை வெற்றிப்படமாக்குவோம், நன்றி என்றார்.

தயாரிப்பாளர் எஸ். தாணு பேசும்போது,

கவிதா என் மகள் மாதிரி. அவருடைய தமிழ் ஆர்வம் என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. அவர் நேரில் பேசினால், சொல் புதிதாக இருக்கும். சொல்லின் பொருள் புதிதாக இருக்கும். சொல்லின் சுவை பெரிதாக இருக்கும். அப்படிப்பட்டவர் ஒரு படத்தை தயாரித்திருக்கிறேன் என்று நேற்று முன்தினம் தான் கூறினார். முன்பே கூறியிருந்தால் பொருளாதாரத்தில் நிறைய மிச்சம் பண்ணி கொடுத்திருப்பேன் என்றேன். என் சகோதரன் தான் இந்த படத்தில் நாயகனாக நடிக்கிறார். ஆகையால், அவரை வந்து நீங்கள் வாழ்த்த வேண்டும் என்றார். நீ எங்க சொன்னாலும் நான் வருவேன் என்றேன். ஒரு பெண்ணாக, பத்திரிக்கையாளராக இருந்து கொண்டு, பத்திரிக்கை உரிமையாளர்களுக்கு மிகவும் பாத்திரமான பெண்மணியாக தான் இந்த பெண்ணை நான் பார்க்கிறேன். தினமலர் ரமே' சாரும், ஆதிமூலம் சாரும் இந்த பெண்மணி மூலமாகத்தான் அவர்களின் எண்ணங்களையும், எழுத்-துக்களையும் கூறுவார்கள். அவர்களுடைய கோவில் திருப்பணிக்கு உற்றத் துணையாக இந்த பெண்மணி வாய்த்திருக்கிறார். அப்படிப்பட்டவர் இப்படத்தை தயாரித்திருப்பது சிறப்பான ஒன்று. பாக்யராஜ் சாரை நான் என்றென்றும் போற்றி புகழக்கூடியவன். அவர் பக்கத்தில் அமர்ந்திருக்கும் ரம்பாவின் கணவர் 2000 கோடிக்கு சொந்தக்காரர். அவர் இந்த மேடையில் அமர்ந்திருக்கும் போது என் கண்கள் பனிக்கிறது. ரம்பாவின் கணவர் இந்திரன் கடந்த வாரம் எனக்கு போன் செய்து, அப்பா உங்கள் ஆசீர்வாதத்தில் என் மனைவியுடன் நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என் மனைவிக்கு வீட்டிலேயே இருப்பது உறுத்தலாக இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால், அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றார். நல்ல கம்பெனிகளை நான் சொல்கிறேன். அதற்குள் நீ அவசரப்பட்டு படம் எடுத்து விடாதே என்று கூறினேன். ரம்பா, சினிமாவில் உன் வரவு நல்வரவாக இருக்கும் என்று அப்பாவாக வாழ்த்துகிறேன். அம்பிகா மேடமை என் படங்களில் நடிக்க வைக்க பலமுறை முயன்று நடக்காமல் போய்விட்டது. ஏதாவது காரண-த்தினால் ஒரு படத்தில் நடிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு. தியாகராஜன் சார் தானாக முன் வந்து அவர் மகனை வண்ண வண்ண பூக்கள் படத்திற்காக கொடுத்தார். அந்த படம் தேசிய விருது வென்றது. பிர'ாந்த் என் குடும்பத்தில் ஒருவர். சக்தி ∴பிலிம் ∴பேக்டரி சக்திவேல் இவ்வளவு அருமையாக பேசுவார் என்று நினைக்கவில்லை. படத்தின் ஒவ்வொரு ∴பிரேமாக எடுத்து பேசும் அளவிற்கு ஒன்றிவிட்டார். அவர் இந்த படத்தை விநியோகிப்பது சால சிறந்தது. படத்தின் நாயகன் வருங்காலத்தில் உயர் சிற்பியாக வருவார் என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன் என்றார்.

நடிகை ரம்பா பேசும்போது,

நான் ரகசியமாக வைத்திருந்ததை தாணு சார் எல்லோர் முன்னாடியும் போட்டு உடைத்து விட்டார். நீண்ட நாட்களுக்கு பிறகு எனக்கு தெரிந்தவர்கள் அனைவரையும் ஒன்றாக இங்கு பார்த்ததில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தயாரிப்பாளர், இயக்குனர் என்று யாராக இருந்தாலும் எங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது பத்திரிகையாளர் தான். அவர்கள் பின்னாடி இருந்து கொண்டு எங்களை முன்னாடி கொண்டு வந்து ஆதரவு தருவார்கள். அப்படி பெண் பத்திரிகையாளராக இருந்து, ஒவ்வொரு படியாக சொந்த உழைப்பில் ஒரு படத்தை தயாரித்திருப்பது பெருமையாக இருக்கிறது. கவிதா எப்போது அழைத்தாலும் நான் வருவேன். இந்த படம் சிறிய படம், பெரிய படம் என்று இல்லை, எனக்கு நல்ல படமாகத் தான் தோன்றுகிறது. டிரைலர் பார்க்கும்

போதே கதை, திரைக்கதை அனைத்தும் நன்றாக இருக்கிறது. எல்லா படத்திற்கும் ஆதரவு தருவது போல் இந்த நல்ல படத்திற்கும் ஆதரவு கொடுத்து மக்களிடம் சேர்த்து வெற்றி படமாக கொண்டு வருவீர்கள் என்று நம்பிக்கை இருக்கிறது. படகுழுவினர் அனைவருக்கும் வாழ்த்துகள் என்றார்.

தயாரிப்பாளர் மற்றும் கதாசிரியர் ஆனந்த கிருஷ்ணன் பேசும்போது,

மெட்ரோ படத்திற்கு பிறகு 2 வருடம் எதுவும் அமையவில்லை. ஒரு விஷயம் நடக்கும் நடக்கும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் தான் மிஞ்சும். எங்களுக்காவது என்ன நடக்கிறது என்பது தெரியும். ஆனால், உடன் இருப்பவர்களுக்கு எதுவும் தெரியாது. ஆனாலும், அந்த 2 வருடமும் என்னை விட்டு போகாமல் கோடியில் ஒருவன் படம் வரைக்கும் என்னுடனே பயணித்த பாண்டிக்கு நன்றி. இந்த படத்தின் மூலம் அவர் இயக்குனராகியிருக்கிறார். இது தான் என்னுடைய சிறந்த தருணமாக கருதுகிறேன். என்னிடம் பலரும் பெரிய நடிகர்களை வைத்து ஏன் படம் எடுப்பதில்லை என்று கேட்டார்கள். பத்திரிகையை நம்பி தான் நான் படம் எடுக்கிறேன். அவர்கள் வெற்றி படமாக ஆக்கி விடுவார்கள். ஆகையால், என் இ'டத்துக்கு படம் எடுப்பேன். பத்திரிகையாளர்கள் சரியாக மக்களிடம் கொண்டு சேர்ப்பார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது. இனிமேலும் அப்படி தான் எடுப்பேன். எனக்கு கொடுத்த ஆதரவை பாண்டிக்கும் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த படத்தின் ஒளிப்பதிவாளர் என். எஸ். உதயகுமார் என்னுடைய எல்லா படத்திலும் பணியாற்றி வருகிறார். அவரின் குழு கொரில்லா படை மாதிரி தான் பணியாற்றுவார்கள்.

என்னுடைய வீடு ஓஎம்ஆரில் தான் இருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பு வழிபறி அதிகமாக இருக்கும். அதனை தடுக்க காவல்துறையினர் கண்காணிப்பு கேமரா பொருத்தினார்கள். ஆனால், எங்கெங்கு கேமரா வேலை செய்யவில்லையோ, எங்கெங்கெல்லாம் கேமராவில் பதிவாகதோ அதை தெரிந்து கொண்டு ஒரு குழுவினர் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை கண்டுபிடித்து காவல்துறையினர் கைது செய்தார்கள். அவர்கள் பின்பற்றிய வழிமுறைகள், அவர்களுக்கு பின்னாடி இயங்கும் குழு என்று எல்லா விஷயத்தின் தீவிரத்தை ஏற்கனவே மெட்ரோவில் சொல்லி விட்டோம். அது ஒரு திருடனைப் பற்றிய கதை. அவன் முகத்தை மூடிக் கொண்டு வருவான். திருடிக் கொண்டு போய் விடுவான். ஆனால், ராபர் என்பவன் நின்று பயத்தைக் காட்டி துன்பறுத்தி நகையைத் திருடி செல்வான். இது தான் திருடனுக்கும் ராபருக்கும் உள்ள வேறுபாடு என்று மெட்ரோவில் சொல்லி இருப்போம். மெட்ரோ திருடனுடைய கதை, இது ராபருடைய கதை. என்னுடைய நீண்ட கால நண்பர் ஜோகன் இப்படத்திற்கு தீவிரமாக பின்னணி இசையமைத்திருக்கிறார்.

அதேபோல் நீண்ட கால தோழி கவிதா என்னுடன் இணைந்து இப்படத்தை தயாரித்திருப்பது பெரிய பலம். ஜேபி சாரை பாண்டி சந்தித்து கதை சொல்லும் போது எல்லாமே எதிர்மறையான பாத்திரமாகவே இருக்கும். ஆனால், 2 முதியவர்கள் இருப்பார்கள். அவர்கள் தான் இப்படத்தில் நேர்மறையான பாத்திரத்தில் இருப்பார்கள், அவர்கள் தான் நாயகர்கள். பொதுவாக இளம் வயது நடிகர் தான் நேர்மறையான நாயகனாக நடிப்பார். ஆனால் இந்த படத்தில் முதியோர் தான் நாயகன். இதை அவருடன் இணைந்து சவாலாக செய்திருக்கிறார் பாண்டி.

இந்த படத்தில் நடித்த டேனியிடம், இப்படத்தில் நாயகன் கேவலமான பாத்திரம் அவனுக்கு ஒரு வில்லன் இருப்பான். அவன் இவனை விட கேவலமான பாத்திரம் என்று கூறினேன். டேனி எனக்கு இதுதான் வேண்டும் என்று பங்கெடுத்து சிறப்பாக நடித்தார்.

இப்படத்தில் அனைவருடன் இணைந்து பணியாற்றியது மகிழ்ச்சியாக இருக்கிறது குறிப்பாக, கலை இயக்குனர் சரவணன், சண்டே இயக்குனர் மகேஷ' அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும். ஒரு பெண்ணின் துப்பட்டாவைப் பிடித்து இழுக்க வேண்டும். அவள் வளைவாக சென்று விழ வேண்டும் என்று கூறினேன். மிகவும் குறுகிய நேரத்தில் அவர்களுடைய கொள்கை வைத்து சரியான திட்டத்துடன் சிறப்பாக செய்து கொடுத்தார்கள். அந்த குறிப்பிட்ட பாத்திரத்தில் நடித்த பெண்ணும் சிறப்பாக பணியாற்றினார். சுமார் 50 அடி உயரத்தில் அங்கும் இங்கும் பறந்து கொண்டே இருக்க வேண்டும். அவரால் இன்று வர முடியவில்லை, அவருக்கு நன்றி. இப்படத்தின் பாடலாசிரியர் அருண் பாரதி அவரும் என்னுடைய நண்பர். இப்படத்தின் பாடல்கள் எழுதியதற்காக நன்றி. எப்போதும் பாதிக்கப் பட்டவரை குற்றம் சாற்றுவதை முதலில் நிறுத்துங்கள். பாதிப்பு ஏற்படுத்துபவர்களை திருத்த வேண்டும் அல்லது களை எடுக்க வேண்டும். இதுதான் தீர்வு. வீட்டில் நடந்தாலும் சரி வெளியே நடந்தாலும் சரி பெண்கள் மீதான இதுபோன்ற கொடூரமான ஆதிக்கத்தை சொல்லும் படம் தான் ராபர். உங்களின் ஆதரவு படத்திற்கு இருக்கும் என்று நம்புகிறேன் என்றார்

# செய்திக் கதம்பம்!

-பாப்பனப்பட்டு வ.முருகன்

### ஆசியாவின் டாப் 3 பார்கள்!



2024ம் ஆண்டிற்கான, ஆசியாவின் சிறந்த 50 பார்களின் பட்டியல், சமீபத்தில், ஹாங்காங்கில் நடந்த விழா ஒன்றில் அறிவிக்கப்பட்டது.

இதில், ஹாங்காங்கைச் சேர்ந்த லியோன் பார், சியோலில் உள்ள ஸெஸ்ட் பார் மற்றும் சிங்கப்பூரில் உள்ள ஜிகர் அண்ட் போனி பார் உள்ளிட்ட பார்கள், முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.

அந்தப் பட்டியலில், இந்தியாவின் பெங்களருவில் அமைந்துள்ள, லீலா பேலஸ் வளாகத்தில் உள்ள, இசட்எல்பி23 என்ற பாரும், 40ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கும் ஒரு வாரம் முன்னதாக, ஆசியாவின் சிறந்த பார்கள் 51 - 100 பட்டியல் வெளியிடப்பட்டது.

இதில், மும்பை பாம்பே கேன்டீன், 59வது இடத்தையும், புது டெல்லியில் உள்ள லேயர், 68வது இடத்தையும், புது டெல்லியைச் சேர்ந்த சைட்கார், 84வது இடத்தையும், புதுடெல்லியைச் சேர்ந்த ஹோம், 96வது இடத்தையும் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

### ஆயிரத்தைக் குறிக்க, "கே" என்ற குறியீடு ஏன் தெரியுமா?

தற்போதெல்லாம், "1000' என்ற எண்ணிற்கு, ஆங்கில எழுத்தான, கே'(K) என்று குறிப்பதை, வழக்கமாக வைத்துள்ளனர்.

இதற்குக் காரணம், மேற்கத்திய நாடுகள் பலவும், கிரேக்கம் மற்றும் ரோமன் கலாச்சாரத்தின் தாக்கத்தையே அதிகம் கொண்டுள்ளன. அதேபோலத் தான், இந்த, "கே"(K) என்ற எழுத்து பயன்படுத்துவதற்கும், மூலம் அங்கே தான் இருக்கிறது என்பதே.

கிரேக்க மொழியில், 'Chilioi" என்றால், "ஆயிரம்" என்று பொருள். கிரேக்க வார்த்தையான, "Chilioi' என்பது, பிரெஞ்சுக்காரர்களால், "கிலோ" என்று சுருக்கப்பட்டது. அதற்குப் பிறகு தான், கிலோ மீட்டர், கிலோ கிராம் போன்றவை கணிக்கப்பட்டது. அந்த, "கிலோ"(Kilo) என்பதற்காகத் தான், "கே"(K) என்ற குறியீடு கொடுக்கப்படுகிறது.

அதேபோல, "மில்லியன்" என்ற எண்ணிற்கு, "எம்"(M) என்ற எழுத்தும், "பில்லியன்" என்பதற்கு, "பி"(B) என்ற எழுத்தும், "ட்ரில்லியன்" என்பதற்கு, "டி"(T) என்ற எழுத்தும் பயன்படுத்தப்படுகிறது.

### ஏழு கோடிக்கு ஏலம் போன புத்தகம்!



1818ம் ஆண்டு அச்சிடப்பட்ட ஒரு புத்தகம், தற்போது 2024ல், ஏழு கோடியே நான்கு லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

"பேய்ப் புத்தகம்" என்று அழைக்கப்படும் அந்தப் புத்தகத்தை, வானத்திலிருந்து பலர் படிப்பதாக நம்பப்படுகிறது.

பிரிட்டி' பெண் எழுத்தாளர் மேரி ெ'ல்லி, தன் 21வது வயதில், அப்புத்தகத்தை எழுதியுள்ளார்.

"Frankenstein: Or The Modern Prometheus' என்று பெயரிடப்பட்ட, அந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள, "பிராங்கன்ஸ்டைன்" என்ற பாத்திரம், உலகம் முழுவதும் பேசப்பட்டு வருவதாகும்.

1818ம் ஆண்டு வெளியிடப்பட்ட அந்தப் புத்தகத்தின் முதல் பதிப்பிலிருந்து 3 பிரதிகள், இன்னும் இருக்கின்றன.

இளஞ்சிவப்பு நிற அட்டை கொண்ட, அந்த 3 பிரதிகளில், ஒரு பிரதி மட்டுமே தனியார் சேகரிப்பில் இருந்து, தற்போது ஏலத்தில் விடப்பட்டது. மற்ற 2 பிரதிகள், நியூயார்க் பொது நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

### வங்கதேச பணச்சந்தை!



பொதுவாக நாம் எங்கு சென்றாலும், வீட்டிற்குத் தேவையான பொருட்களைச் சந்தைகளில் வாங்குவோம்.

அதாவது, காய்கறிகள், பழங்கள், பூக்கள், மளிகைப் பொருட்கள் மற்றும் இறைச்சி உட்பட அனைத்து பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்க சந்தைகள் உண்டு.

எப்போதுமே, கடைகளில் வாங்குவதை விட, இதுபோன்ற சந்தைகளில் வாங்கினால், விலை மலிவாகவும், பொருட்கள் புதிதாகவும் இருக்கும்.

அதேபோல், வங்கதேசத்தின் டாக்காவில், “கரன்சி மார்க்கெட்“ என்று அழைக்கப்படும், ரூபாய் நோட்டுகளுக்கான சந்தை இருக்கிறது.

அந்தச் சந்தையில், காய்கறிகளை விற்பனை செய்வது போல, பழைய கரன்சிகளுக்கு, புதிய கரன்சிகளை, கமி'ன் அடிப்படையில் மாற்றித் தரும் விற்பனையை செய்து வருகின்றனர்.

அங்குள்ள கடைகளில், பணமாற்று விற்பனை மூலம், கோடிக்கணக்கில் பணம் புழங்குகிறது. முக்கியமாக அங்கு, பழைய நோட்டுகளை மாற்றுவது நடக்கிறது.

கிழிந்த 100 ரூபாய் நோட்டு இருந்தால், அதற்குப் பதிலாக, 80 அல்லது 90 ரூபாய் கொடுக்கிறார்கள். இவ்வாறு நோட்டுகளை மாற்றும் செயல்முறை, வங்கிகளிலும் நடக்கிறது என்றாலும், சில மணி நேரம் வரிசையில் நின்றபடி காத்திருக்க வேண்டும் என்பதால், அந்தச் சந்தைக்கு வந்து, கிழிந்த நோட்டுகளை, மக்கள் மாற்றுகிறார்கள்.

வங்கதேசம் மட்டுமின்றி, இந்தியாவின் தலைநகரான டெல்லியிலும், இத்தகைய சந்தை இருக்கிறது.

வங்கதேசம் போல, பெரிய சந்தையாக இல்லையென்றாலும், இந்தியாவின் பல நகரங்களில், கிழிந்த நோட்டுகளை மாற்றுவதற்கான சிறிய சந்தைகள் இருக்கின்றன.

### பணக்கார பிச்சைக்காரர்!

பாகிஸ்தான் நாட்டின் பணவீக்கத்திற்கு மத்தியிலும், அந்நாட்டைச் சேர்ந்த பிச்சைக்காரர் ஒருவர், கோடிக்கணக்கில் சம்பாதித்து வருகிறார்.

அவரது சொத்து மதிப்பைக் கேட்டால், அதிர்ச்சியில் உறைந்தே போவீர்கள். அந்தளவுக்கு, கோடிக்கணக்கில் அவருடைய சொத்து உள்ளது.

அவர், தனது குழந்தைகளை, நாட்டின் மிகப்பெரிய பள்ளியில் படிக்க வைத்திருப்பதோடு, அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு காப்பீடும் எடுத்துள்ளார்.

அவருடைய பெயர், 'வுகத். பாகிஸ்தானின் பணக்கார பிச்சைக்காரரான அவர், உணவிற்காகவும், பணத்திற்காகவும், தெருத்தெருவாக ஒவ்வொரு நபரிடமும் கையேந்தி பிச்சை எடுத்து வருகிறார்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள, முல்தான் நகரில், அவர் வசித்து வருகிறார்.

2021ம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில், 'வுகத்தின் வங்கி கணக்கில் மட்டும், 1.7 மில்லியன் பணம் இருந்ததாக, பாகிஸ்தான் நாட்டின் வரி வசூலிக்கும் நிறுவனமான பெடரல் போர்டு ஆப் ரிவென்யூ கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பிச்சையெடுப்பதின் மூலம், தினமும்

குறைந்தபட்சம்,1000 ரூபாய் வரையாவது, அவர் சம்பாதித்து விடுவதாக கூறப்படுகிறது.

**இந்த இடத்தில், கார் பயணத்திற்கு அனுமதியில்லை!**



ஒன்று தான், "மேக்கினாக் தீவு". மிச்சிகன் மாகாணத்தில், மேல் மற்றும் கீழ் தீபகற்பங்களுக்கு இடையே, ஹூரான் ஏரியில், இந்தக் குட்டித் தீவு அமைந்துள்ளது.

இந்தத் தீவுக்குச் செல்ல, சிறிய விமானத்தில் பயணிக்கலாம். அல்லது, மெக்கினாவ் நகரத்திலிருந்து படகு மூலம் சென்று, டவுன்டவுனில் இறங்கி, அங்கிருந்து நடந்தும் செல்லலாம். அதுவும் இல்லாவிட்டால், சைக்கிளை வாடகைக்கு எடுக்கலாம். அல்லது, குதிரை வண்டியில் பயணிக்கலாம்.

மேக்கினாக் தீவில், வெறும் 500 பேர் மட்டுமே வசிக்கின்றனர். ஆனால், இங்கு ஆண்டு முழுவதும் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, சுமார் 10 லட்சம்.

இந்தத் தீவுகளில் இயக்கப்பட்ட மோட்டார் வாகனங்களால், இங்குள்ள குதிரைகள் அச்சமடைந்ததால், கடந்த 1898ம் ஆண்டு முதல், மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால், இந்தத் தீவுப் பகுதியைச் சுற்றிப் பார்க்க, வெறும் குதிரை வண்டிகள் தான் இருக்கின்றன. ஆனால், இங்கு தங்குவதற்கு, அதிநவீன நட்சத்திர விடுதிகள் இருக்கின்றன. எனவே, கோடைக் காலம் முழுவதையும் கழிக்க, பல பணக்காரர்கள் இங்கு வந்துவிடுகிறார்கள்.

யார் வந்தாலும், கார் இயக்கக் கூடாது என்பதைப் போலவே, மாலை 6:30 மணி ஆகிவிட்டால், விருந்தினர்கள் கண்டிப்பாக கோட், டை, ஸ்லாக்ஸ், பேண்ட் போன்றவற்றை அணிய வேண்டும்.

பகல் நேரத்தில், சர்ரே மலைப்பகுதிக்குச் செல்லலாம். இங்கு, ஏராளமான கண்கவர் காட்சிகளைப் பார்க்க முடியும். அத்துடன், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமையான குதிரை வண்டிகளும், சறுக்கு வண்டிகளும் இருக்கும் அருங்காட்சியகமும் உள்ளது. அதேபோல், நூற்றுக்கணக்கான பட்டாம்பூச்சிகள் இருக்கும் பட்டர்பிளை கன்சர்வேட்டரியும் இருக்கிறது.

இங்கு, ஒரு சைக்கிளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, தீவுப்பகுதியின் கரையோரங்களைப் பார்த்து ரசிக்கலாம். அத்துடன், மேக்கினாக் ஐலேண்ட் ஸ்டேட் பார்க், காடுகள் மற்றும் தனித்துவமான சுண்ணாம்பு பாறையால் செதுக்கப்பட்ட வளைவு ஆகியவற்றைப் பார்ப்பது, மிகவும் அற்புதமானது.

**இந்த விலங்கின் பால், கருப்பு நிறம்!**



மனிதர்களின் வாழ்க்கையில், முக்கிய பங்கு வகிப்பது, பால். பிறந்த குழந்தை முதல், முதியவர்கள் வரை, தங்களது அன்றாட வாழ்வில் பாலை உட்கொள்கின்றனர். ஏனென்றால், ஊட்டச்சத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், பால் மிகவும் அவசியம்.

மனிதர்கள் குழந்தையாக இருக்கும் போது, தாய்ப்பால் கொடுக்கப்படுகிறது. அவர்கள் சற்று வளர்ந்ததும், ஆடு அல்லது மாட்டுப் பால் கொடுக்கப்படுகிறது. மனிதர்கள் மட்டுமன்றி, ஆடு, மாடு, ஒட்டகம், சிங்கம், புலி என, பெரும்பாலான மிருகங்கள் பாலூட்டிகளாக உள்ளன.

உலகில் சுமார் 6,400 பாலூட்டிகள் உள்ளதாக கூறப்படுகிறது. இந்த 6,400 பாலூட்டிகளில், ஒரு விலங்கு மட்டும், கருப்பு நிற பாலைத் தருகிறது.

கருப்பு நிறத்தில் பால் தரும் அந்த விலங்கு, கருப்பு காண்டாமிருகம் தான். இவை, ஆப்பிரிக்க கருப்பு காண்டாமிருகம் என அழைக்கப்படுகின்றன.

இந்த வகை காண்டாமிருகங்களின் பாலில், 0.2 சதவீதம் மட்டுமே கொழுப்பு உள்ளது. தண்ணீர் போல இருக்கும் காண்டாமிருகத்தின் பால், கருப்பு நிறத்தில் இருக்கும்.

கருப்பு காண்டாமிருகங்களால், 4 முதல் 5 வயது வரை மட்டுமே இனப்பெருக்கம் செய்ய முடியும். அவை, ஒரு வருடத்திற்கும் மேலாக கர்ப்பமாக இருக்கும். அவை, ஒரு முறை ஒரு குட்டியை மட்டுமே ஈனும் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகிலேயே அதிக பிரமிடுகள் உள்ள நாடு!



பிரமிடுகள் பற்றிய பேச்சை எடுத்தாலே, அனைவரின் நினைவுக்கும் வருவது, எகிப்து தான். அந்தளவுக்கு, அது அழகிய பிரமிடுகளுக்கு பெயர் பெற்ற நாடு. ஆனால், உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான பிரமிடுகள் உள்ள நாடு, எகிப்து அல்ல என்பது தான் உண்மை.

சூடான் நாட்டில் தான், எண்ணிலடங்கா பிரமிடுகள் காணப்படுகின்றன. அந்நாட்டின் பரந்த பாலைவன நிலப்பரப்பில், சிறிய மற்றும் பெரிய அளவிலான, சுமார் 240 பிரமிடுகள் இருக்கின்றன.

சூடானின் பிரமிடுகள், அந்நாட்டின் பல பகுதிகளிலும் பரவியுள்ளன. அவற்றின் தனித்துவமான கட்டிடக் கலை மற்றும் அதன் பின்னணி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

நுபியான் மெரோ பிரமிடுகள், மிகவும் சிறிய, ஆனால் மிகவும் பிரபலமான எகிப்திய பிரமிடுகளைப் போலவே ஈர்க்கக் கூடியவை. சூடானில், நைல் நதியின் கிழக்குக் கரையில், இந்தப் பிரமிடுகள் காணப்படுகின்றன.

நுபியான் பிரமிடுகள், கி.மு., 2,500க்கும் மற்றும் கி.பி., 300க்கும் இடையில், பண்டைய குஷைட் ராஜ்யங்களால் கட்டப்பட்டவை. அவை, செங்குத்தான பக்கங்கள் மற்றும் கூர்மையான கோணங்களைக் கொண்டுள்ளன. அவற்றில் மிகவும் பிரபலமானது, யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமான, மெரோ நெக்ரோபோலிஸ் ஆகும்.

இந்தப் பிரமிடுகள், எகிப்தைப் போலவே அரச கல்லறைகளாக இருந்தவை. குஷைட் ஆட்சியாளர்களின் வாழ்க்கை மற்றும் சடங்குகள் பற்றிய ஒரு பார்வையை, இந்தப் பிரமிடுகள் வழங்குகின்றன.

அதிக எண்ணிக்கையிலான பிரமிடுகளை சூடான் கொண்டிருந்தாலும், எகிப்திய பிரமிடுகளைப் போல் பிரபலம் அடையவில்லை.

சூடான் நாடு, எகிப்துக்கு அருகிலேயே இருக்கும் நாடு. பண்டைய காலத்தில் எகிப்தை ஆட்சி செய்த குஷைட் ஆட்சியாளர்கள், சூடானையும் ஆட்சி செய்திருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அங்கு அதிகளவிலான கல்லறைகளை, அதாவது பிரமிடுகளை எழுப்பியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.




கமல் பிரகாஷ் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் குமார், திவ்யபாரதி, குமரவேல், ஆண்டனி மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் கிங்ஸ்டன். இசை, தயாரிப்பு ஜி.வி.பிரகாஷ் குமார்,

கதை

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தூவத்தூர் மீனவ கிராமத்தில் கதை தொடங்குகிறது. அங்கிருக்கும் மீனவ மக்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்வதில்லை. அப்படியே மீன்பிடிக்க சென்றாலும் பிணமாகத்தான் கரை ஒதுங்குகின்றனர். 1982 இல் இறந்து போன போஸ் என்பவரின் கெட்ட ஆத்மா தான் கடலுக்கு செல்லும் எல்லோரையும் மீன் பிடிக்க விடாமல் ஆட்டி படைக்கிறது என மக்கள் எல்லோரும் நம்ப தொடங்குகின்றனர். அதே நேரத்தில் தூவத்தூர் கிராமத்தில் இருக்கும் கன்னி பெண்களும் இருட்டில் மாயமாகி அடுத்த நாள் பிணமாக கரை ஒதுங்குகின்றனர். அடுத்தடுத்து நடக்கும் மர்மங்களுடன் தூவத்தூர் மீனவ கிராமத்தில் பிண வாடை தான் அடிக்கிறது. 1982ல் தொடங்கிய கதைக்கு முடிவு கிடைத்ததா? தூவத்தூர் மக்களை நாயகன் கிங் மீட்டாரா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை

ஒரு போட் வாங்கி மீன் பிடித்து பெரிய ஆளா வரனும் என்பது தான் கிங் வாழ்நாள் ஆசை அந்த கிங் கதாபாத்திரத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிப்பிலும், நடனத்திலும் சிறப்பாக நடித்துள்ளார். அவரது காதலி கதாபாத்திரத்தில் திவ்யாபாரதி சிறப்பாக நடித்துள்ளார். அழகம்பெருமாள், சேத்தன், குமரவேல், ஆண்டனி, ஜி.வி.பிரகாஷ்க்கு நண்பர்களாக வந்தவர்கள், அந்த சிறுவன் என அனைவரும் மிக சிறப்பாக நடித்துள்ளனர். தாமஸ் கதாப்பாத்திரத்தில் நடித்த தாமஸ் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். ஜி.வி.பிரகாஷ் இசையில் உருவான பாடல்கள் நன்றாக இருந்தது. பிண்ணனி இசையும் ரசிக்கும்படி உள்ளது. ராசா ராசா பாடல் அருமை.கோகுல் பினாயின் ஒளிப்பதிவு படத்திற்கு பெரியபலம்.விஎப்எக்ஸ் காட்சிகள் அருமை

மீனவ கிராமத்தை வைத்து திகில் நிறைந்த பேய் படமாக எடுக்க முயற்சித்த அறிமுக இயக்குநர் கமல் பிரகாஷை பாராட்டலாம். திரைக்கதையில் சுவாராஸ்யம் இல்லாததால் என்ன சொல்ல வருகிறார் இயக்குநர் கமல் என்பது சற்று தடுமாற்றமாகத்தான் இருக்கிறது. இரண்டாம் பாதியில் காற்று, மழை, கடல் சீற்றம் கடல் முழுக்க மண்டை ஓடுகள் என திகிலை ஏற்படுத்தினாலும், பெரிதான ஒரு மர்மத்தை பார்த்த பீல் வரவில்லை.




தமிழ் சினிமாவில் இசையமைப்பாளராக, நடிகராக ஜி.வி. பிரகாஷ் வெற்றி பெற்றவர். தயாரிப்பாளராக வரும்போது நல்ல வெற்றி படத்தை கோடுத்திருக்க வேண்டாமா? வாழ்த்துக்கள்.




ஹேம்நாத் நாராயணன் இயக்கத்தில் ரிச்சி கபூர், தேவ்ராஜ் ஆறுமுகம், சுகன்யா ஷண்முகம், யுவிகா ராஜேந்திரன், அரியா செல்வராஜ் மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் மர்மர்

கதை

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜவ்வாதுமலைப் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றை ஒட்டியுள்ள வனத்தில் ஏழு கண்ணி தெய்வங்கள் இருப்பதாகவும், அவர்கள் பௌணர்மி தினத்தில் அங்கிருக்கும் குளத்தில் குளிப்பதாகவும், அந்த கண்ணி தெய்வங்களுக்கு வருடம் வருடம் செய்ய வேண்டிய பூஜையை செய்யவிடாமல், அங்கிருக்கும் சூனியக்காரியின் ஆவி தடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. குழந்தைகளை பலி

கொடுத்த அந்த சூனியக்காரி அமானுஷ்யமாக காட்டில் அலைவதாகவும், அதனால் அந்த காட்டுக்குள் சென்றவர்கள் திரும்பி வருவதில்லை, என்றும் கிராம மக்கள் சொல்கிறார்கள். இது உண்மையா ? என்பதை ஆய்வு செய்ய அந்த இடத்திற்கே ஆவணப்படமாக எடுக்கும் நான்கு பேர் கொண்ட குழு, அவர்களுக்கு வழிகாட்டும் கிராமத்து பெண் என ஐந்து பேர் அந்த காட்டுக்குள் செல்கிறார்கள். ஊர் மக்கள் சொன்னது போல் அங்கு சூனியக்காரியின் அமானுஷ்யம் இருந்ததா?, உண்மை அறிய காட்டுக்குள் சென்ற ஐந்து பேரின் நிலை என்ன ஆனது? என்பதை வித்தியாசமான திகில் ஜானரில் சொல்லியிருப்பதுதான் மர்மர் படத்தின் கதை

ரிச்சி கபூர், தேவ்ராஜ் ஆறுமுகம், சுகன்யா ஷண்முகம், யுவிகா ராஜேந்திரன், அரியா செல்வராஜ் என படத்தில் நடித்திருக்கும் அனைவரும் எதார்த்தமாக நடித்திருக்கிறார்கள். ஒரு காட்டுக்குள் சிக்கிக்கொண்டு பயத்தில் உறைந்து போகும் காட்சிகளில் படம் பார்ப்பவர்களையும் பதற வைக்கும் அளவுக்கு தங்களது பயத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஒளிப்பதிவாளர் ஜேசன் வில்லியம்ஸ், இரவு நேரத்தில் மிக குறைந்த வெளிச்சத்தில் காட்சிகளை படமாக்கியிருந்தாலும், காட்சிகளை மிக தரமாக படமாக்கியிருக்கிறார். ஒலி வடிவமைப்பாளர் கேவ்யன் பிரெடெரிக் இசையமைப்பாளர் இல்லை என்ற உணர்வே ஏற்படாத வகையில் நேர்த்தியாக பணியாற்றியிருக்கிறார். ஆள் நடமாட்டம் இல்லாத காட்டுப் பகுதியின் பகல் மற்றும் இரவு நேரங்களில் கேட்கப்படும் ஓசைகளை துல்லியமாக பதிவு செய்திருப்பவர், நடுநடுவே வரும் அமானு'ஷய ஒலிகள் மூலம் நெஞ்சை பதற வைக்கிறார்.

ஃபவுண்ட் ஃபூட்டேஜ்' என்று சொல்லக்கூடிய நேரடியாக கேமராவில் பதிவாகும் காட்சிகளைக் கொண்டு படமாக்கப்பட்ட முதல் தமிழ் திகில் படம் என்ற தனிச்சிறப்போடு படத்தை உருவாக்கியிருக்கும் இயக்குநர் ஹேமநாத் நாராயணன் காட்சிகள் அனைத்தையும் நீளமாக வைத்திருப்பது பார்வையாளர்களை சற்று சலிப்படைய செய்கிறது. இந்த குறையை மட்டும் நிவர்த்தி செய்தால் நிச்சயம் படம் வித்தியாசமான திகில் அனுபவத்தை கொடுத்திருக்கும்.

மொத்தத்தில், மர்மர் வித்தியாசமான முயற்சி. வாழ்த்துக்கள்.

பெப்பின் ஜார்ஜ் ஜெயசீலன் இயக்கத்தில் ரூபா கொடவையூர், நரேந்திர பிரசாத், ராஜு ராஜப்பன், கீதா கைலாசம், ஹரிதா மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் எமகாதகி

கதை

அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி என்று மகிழ்ச்சியான குடும்பத்தோடு வாழும் நாயகி ரூபா கொடவையூர், ஒருநாள் தனது அப்பா கோபத்தில் திட்டி அடித்ததை தாங்கிக் கொள்ளாமல் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்கிறார். இது வெளியே தெரிந்தால் வேறு விதமாக கதை கட்டுவார்கள் என்று நினைக்கும் குடும்பத்தார், அவருக்கு ஏற்கனவே இருந்த ஆஸ்துமா பிரச்சனையால் இறந்தவிட்டதாக ஊர் மக்களிடம் சொல்கிறார்கள். ஊர் மக்களும் நம்பி விடுகிறார்கள். இறுதிச் சடங்குகள் முடிந்து சுடுகாட்டுக்கு சடலத்தை எடுத்துச் செல்ல தயாராகும் போது, தூக்க முடியாத அளவுக்கு சடலம் கனமாக இருப்பதோடு, திடீரென்று அசைவுகள் தெரிகிறது. இதனால் துக்க வீட்டில் சற்று சலசலப்பு ஏற்பட, மீண்டும் சடலத்தை தூக்க முயற்சிக்கும் போது அந்த சடலம் எழுந்து உட்கார்ந்து விடுகிறது. இதனால் அந்த பகுதியே பெரும் பரபரப்புக்கு உள்ளாகிறது. துக்க வீட்டுக்கு வந்த ஊர் மக்கள் யாரும் அவர் அவர் வீட்டுக்கு திரும்பி செல்லாமல் அங்கேயே இருக்க, மறுபக்கம் சுடுகாட்டில் இறுதிச் சடங்கு செய்பவரை அழைத்து வந்து, என்னாச்சு என்று பார்க்க சொல்கிறார்கள். உட்கார்ந்த நிலையில் இருக்கும் அந்த சடலத்தை பார்த்துவிட்டு, இந்த பெண் உங்களிடம் ஏதோ சொல்ல வருகிறார், என்று சொல்கிறார். அதன்படி, இறந்த நாயகி ரூபா என்ன சொல்ல வருகிறார்?, என்பதை மிக சுவாரஸ்யமாக சொல்லியிருப்பதே எமகாதகி படத்தின் கதை

நாயகி ரூபா கொடவையூர் தனது நடிப்பின் மூலம் கைதட்டல் பெறுகிறார். அன்பு என்ற கதாபாத்திரத்தில் ரூபாவின் காதலனாக நடித்திருக்கும் நரேந்திர பிரசாத் சிறப்பாக நடித்துள்ளார்.

எழுதி இயக்கியிருக்கும் இயக்குநர் பெப்பின் ஜார்ஜ் ஜெயசீலன், தான் பார்த்த ஒரு உண்மை சம்பவதை திரை மொழியில் மிக சிறப்பாக சொல்லியிருக்கிறார்.

உங்கள் அச்சாரம் You Tube Channel ல்

ரசித்து பார்க்க பல குறும்படங்கள்




சொல்லிட்டாளே காதல் கதை குறும்படம்



# 'கோல்டன் பிளட்“ பற்றி தெரியுமா?

-பாப்பனப்பட்டு வ.முருகன்

நீங்கள் இதுவரை, நான்கு ரத்த வகைகளை (A, B, AB மற்றும் O) பற்றி மட்டுமே கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால், இவை தவிர, உலகின் மிக அரிதான ரத்த வகை ஒன்றும் உள்ளது என்பது, உங்களுக்கு தெரியுமா?

விஞ்ஞானிகள் இதை, “கோல்டன் பிளட்“ என அழைக்கிறார்கள். “ஆர்.எச்.“ என்பது தான், இந்த அரிய வகை ரத்தத்தின் பெயர்.

ஆர்.எச். என்ற ரத்த வகை, உலகம் முழுவதும் வசிப்பவர்களில், 50 பேருக்கும் குறைவானவர்களிடம் மட்டும் தான் உள்ளது. தற்போது வரை, அவர்களுள் 9 பேர் மட்டுமே, ரத்த தானம் செய்ய ஒப்புக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த ரத்த வகை, “பூஜ்ஜிய ரத்தம்“ என்றும் அழைக்கப்படுகிறது.

ஜப்பான், பிரேசில், கொலம்பியா, அயர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில், இந்த ரத்த வகையை கொண்ட நபர்கள் வசிக்கின்றனர்.

இந்த வகை ரத்தம், முதன்முதலில் 1961ல் கண்டறியப்பட்டது. ஆஸ்திரேலிய பழங்குடியின கர்ப்பிணிப் பெண்ணின் ரத்தத்தை பரிசோதித்தபோது, இந்த வகை ரத்தம் பற்றிய செய்தி வெளியானது.

பொதுவாக, மனித ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களில், “ஹீமோகுளோபின்“ என்ற வேதிப்பொருள் உள்ளது. இந்த ஹீமோ குளோபின் தான், ரத்தத்துக்கு சிவப்பு நிறத்தைக் கொடுக்கிறது என்பதுடன், உடலில் உள்ள அனைத்து செல்களுக்கும் ஆக்சிஜனையும் எடுத்துச் செல்கிறது.

உலகின் மிக அரிதான, ஆர்.எச். வகை ரத்தத்தின் ஒரு துளி கூட, தங்கத்தை விட அதிக விலை கொண்டது என்று கூறப்படுகிறது.

ஆர்.எச். காரணி பூஜ்யமாக இருக்கும் நபர்களுக்கு மட்டுமே, இந்த ரத்தம் இருக்கும். இந்த ரத்தத்தில் ஆன்டிஜென்கள் இல்லை என்பதால், இதை






எந்தவொரு ரத்த வகையை கொண்ட நபர்களுக்குக் கொடுத்தாலும், அவரது உடல் அதை ஏற்றுக்கொண்டு விடும்.

ஆர்.எச். காரணி என்பது, ரத்த சிவப்பணுக்களின் மேற்பரப்பில் காணப்படும், ஒரு சிறப்பு வகை புரதமாகும். இந்தப் புரதம், சிவப்பு ரத்த அணுக்களில் இருந்தால், ரத்தம் ஆர்.எச். பாசிடிவ் என்றும், இந்தப் புரதம் இல்லை என்றால், ரத்தம் ஆர்.எச். நெகடிவ் என்றும் கூறப்படுகிறது.

இந்த அரிய வகை ரத்தத்தில் ஆன்டிஜென்கள் இல்லாததால், இந்த ரத்த வகையை சேர்ந்தவர்கள், எளிதில் ரத்தசோகை பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

கோல்டன் பிளட் உருவாகக் காரணம், மரபணு மாற்றமும், ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு கடத்தப்படுவதுமே தான் என்று, நிபுணர்கள் கூறுகிறார்கள். இதற்கு இரண்டாவது காரணம், நெருங்கிய உறவில் திருமணம் செய்வதாம்.

கொசுறு தகவல்: கிரேக்கத்தில், கடவுள்களின் உடலில் கோல்டன் பிளட் பாய்கிறது என்று நம்பப்படுகிறது. இந்த கோல்டன் பிளட் தான், கடவுள்களை அழியாமல் அமரராக இருக்கச் செய்கிறது என்ற நம்பிக்கையும் உண்டு. ஆனால், இப்போது மனிதர்களைப் பொறுத்தவரை, இந்த கோல்டன் பிளட், அவர்களுக்கு தீங்கு தான் விளைவிக்கும்.

# 2025 மார்ச் ராசி மாத பலன்கள்

## மேஷம்



இந்த மாதம் இரண்டாம் வாரம் வரை நேரம் மிகவும் சிறப்பானதாக இருக்கும். நீங்கள் நினைத்ததெல்லாம் சிறப்பாக நிறைவேற கூடியதாக அமையும். குறிப்பாக தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பாக நல்ல செய்திகள் கிடைக்கும். நீண்ட காலமாக வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்பு அமையும். தேர்வு மட்டும் போட்டிக்குத் தயாராக கூடிய இளைஞர்களுக்கு வெற்றி கிடைக்கக்கூடிய மாதம். பணியிடத்தில் மேலதிகாரிகளின் முழு ஆதரவு பெற வாய்ப்புள்ளது. பதவி உயர்வு அல்லது இடமாற்றம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. சமூகத்தில் உங்களின் மரியாதை அதிகரிக்கும். அன்புக்குரியவர்களை சிந்திக்க கூடிய வாய்ப்பும் அவர்களுடன் மகிழ்ச்சியாக நேரத்தை செலவிடவும் முடியும். .

## ரிஷபம்



மாத தொடக்கத்தில் குடும்ப பொறுப்புகள், முக்கிய வேலைகளை முடிப்பதில் மும்முரமாகச் செயல்படுவீர்கள். நண்பர்கள் அல்லது செல்வாக்கு மிக்க நபர்களின் உதவியால் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பணிகளை முடிக்க முடியும். குடும்ப பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும், உறவுகளை மேம்படுத்துவதிலும் கவனம் தேவை. எந்த ஒரு வேலை தொடர்பாகவும் அதிர்'டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பணியிடத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வேலையை மாற்ற நினைப்பவர்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் கிடைக்கும். போட்டி, விளையாட்டு தொடர்பான முயற்சிகளில் எதிர்பார்த்து வெற்றி கிடைக்கும். மாணவர்களுக்கு நல்ல செய்திகள் தேடி வரும். குடும்பம் தொடர்பாக முக்கிய முடிவு எடுக்கும் போது பெற்றோருடன் ஆலோசிப்பது அவசியம்.

## மிதுனம்



இந்த மாதத்தில் உறவுகள் மற்றும் பணம் தொடர்பான விஷயத்தில் கவனமாக இருக்கவும். முக்கிய முடிவுகளை கவனமாக எடுத்தால் எதிர்பார்த்து வெற்றி பெற முடியும். மாதத்தின் தொடக்கத்தில் வணிகத்தில் லாபத்தை பெறுவீர்கள். நீங்கள் முன்னர் செய்த முதலீடுகள் மூலம் லாபத்தைப் பெறுவீர்கள். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். இந்த மாதத்தின் இரண்டாம் வாரத்தில் திடீர் பண ஆதாயம் ஏற்படும். வீடு, மனை என சொத்து வாங்கும் வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கோபத்தைக் கட்டுப் படுத்த வேண்டியது அவசியம். மாதத்தின் நடுவில் அரசு தொடர்பான திட்டங்கள் மூலம் நன்மை அடைவீர்கள். பணம் எதிர்பாராத விதமாக விரயமாகும்.

## கடகம்



மாதத் தொடக்கத்தில் பணத்தை சரியாக நிர்வகிப்பது நல்லது. வீண் செலவுகள் உங்களைத் துரத்தும். கடன் வாங்குவதற்கான வாய்ப்பு உண்டு. வீடு மற்றும் மனை தொடர்பான தகராறுகள் மன உளைச்சலை ஏற்படுத்தும். வாழ்க்கையில் அன்றாட வழக்கத்திலும், உணவு விஷயத்திலும் சிறப்பு கவனம் செலுத்தவும். இந்த மாதத்தின் பிற்பகுதியில் பணியிடத்தில் எதிர் பார்த்ததை விட குறைவான ஆதரவு கிடைக்கும். துணையுடன் தேவையற்ற கருத்து வேறுபாடுகள் ஏற்படும். கோபத்தைக் கட்டுப்படுத்தி விட்டு செல்ல வேண்டிய காலம். மாதத்தின் பிற்பகுதியில் காதல் தொடர்பான சாதகமான சூழல் உருவாகும். இந்த செயலிலும் முன்னேற்றம் ஏற்படும். மாதத்தின் கடைசி வாரத்தில் உங்களின் கடின உழைப்பால் வேலை, தொழில் தொடர்பாக மிகவும் சாதகமான பலன்கள் பெறுவீர்கள். ஆரோக்கியம் சாதகமாக இருக்கும்.

## சிம்மம்



மார்ச் மாதம் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்ததாக அமையும். மாத தொடக்கத்தில் உங்களுக்கு சுகமாகவும், வெற்றிகள் கிடைக்கக் கூடியதாகவும் இருக்கும். முக்கிய வேலைகளை முடிப்பதில் நண்பர்கள் மற்றும் உறவினர் களின் ஆதரவு கிடைக்கும். காதல் தொடர்பான விஷயத்தில் மகிழ்ச்சியான சூழல் உருவாகும். மாதத்தின் இரண்டாம் வாரத்தில் உங்கள் பேச்சில் கவனம் தேவை. யாரையும் கிண்டல், கேலி செய்ய வேண்டாம். வாக்குவாதத்தில்

ஈடுபடுவதைத் தவிர்க்கவும். முக்கிய விஷயங்களை பேசி தீர்த்துக் கொள்வது நல்லது.

## கன்னி



இந்த மார்ச் மாதத்தில் தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பாக சாதகமான பலன்கள் கிடைக்கும். வணிகத்தில் விரும்பிய லாபம் கிடைப்பதால், உங்கள் தொழிலை விரிவுபடுத்த வாய்ப்புகள் உருவாகும். வேலை தொடர்பாக சக ஊழியர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். புதிய வருமான ஆதாரங்கள் உருவாக்கும். போட்டி தேர்வுக்கு தயாராகக்கூடிய மாணவர்களுக்கு நல்ல செய்திகள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஏற்ற நல்ல பலனை பெறுவீர்கள். சமூகப் பணி, ஆன்மீக பணிகளுக் காக நேரத்தை செலவிட வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் சில சுப காரியங்கள் நடக்கும். நீண்ட காலமாக வீடு, மனை வாங்க நினைத்தவர்களுக்கு வாய்ப்புகள் உருவாகும்.

## துலாம்



இந்த மார்ச் மாதம் மிகவும் சிறப் பானதாகவும், வெற்றிகள் தரக்கூடியதாக அமையும். மாதத் தொடக்கத்தில் வீட்டிலும், பணியிடத்திலும் பிறரின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்களின் சிறப்பான செயல் பாட்டால் பாராட்டு கிடைக்கும். பதவி அல்லது முக்கிய பொறுப்புகள் கிடைக்கும்.மாதத்தின் பிற்பகுதியில் வணிகம் தொடர்பாக முன்னேற்றம் ஏற்படும். விரும்பிய லாபம் கிடைக்கும். வீட்டை பராமரிப்பது, அலங்கரிப்பது தொடர்பாக செலவுகள் ஏற்படும். இந்த மாதத்தில் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். போட்டி தேர்வு, விளையாட்டு தொடர்பான முயற்சிகளில் மாணவர்களுக்கு அலைச்சல் ஏற்படும். மாதத்தின் நடுவில் செல்வாக்கு மிக்க நபர்களின் அறிமுகம், ஆதரவு கிடைக்கும். இந்த மாதத்தில் ஆன்மீகம், சமூக பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காதல் உறவில் அன்பும், நல்லிணக்கமும் இருக்கும்.

## விருச்சிகம்



மார்ச் மாதத்தின் முதல் பகுதி சில பிரச்சனைகளும், கவலைகளும் தரக்கூடியதாக இருக்கும். இந்த மாதத்தின் பெரும்பாலான நேரம் குடும்பம் மற்றும் வேலை தொடர்பான பிரச்சனைகளை சமாளிப்பதில் செலவாகும்.நிலம், சொத்து தொடர்பான குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். காதல் உறவில் தவறான பதில்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியிடத்தில் எதிரிகள் செய்தல் கவனம் தேவை. உடல் நலனில் அக்கறை காட்டவும். பருவ கால நோய் பாதிக்க வாய்ப்புள்ளது. இரண்டாம் வாரத்தில் பண பரிவர்த்தனைகளில் கவனம் தேவை. முதலீடு தொடர்பான விஷயத்தில் எச்சரிக்கையுடன் செயல்படவும். குறுகிய ஆதாயத்திற்கு ஆசைப்பட வேண்டாம். வேலை தொடர்பாக புதிய வருமான ஆதாரங்கள் கிடைக்கும். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும்.

## தனுசு



மார்ச் மாதம் உங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும். உங்களுக்கு சில நல்ல வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். கடின உழைப்பின் முழு பலன் கிடைக்கும். தொழிலில் குறிப்பிடத்தக்க லாபத்தை ஈட்ட முடியும். வேலை தொடர்பாக மேற்கொள்ளும் பயணங்கள் இனிமையானதாகவும் லாபகரமானதாகவும் இருக்கும்.மாதத்தின் கடைசியில் கூடுதல் பணிச்சுமை இருக்கும், இதன் காரணமாக நீங்கள் உடல் மற்றும் மன சோர்வை அனுபவிக்க நேரிடும். இந்த காலத்தில், உங்கள் இலக்கை அடைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். உறவுகளைப் பொறுத்தவரை இம்மாதம் சுமாராக இருக்கும். உங்கள் துணையுடன் ஏதாவது ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

## மகரம்



மார்ச் மாதத்தில் திட்டமிட்ட பணிகளை முடிக்க கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். எந்த வொரு வேலையையும் நாளை வரை ஒத்திவைக்கும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும். மாதத்தின் முதல் பாதியில் வேலை அழுத்தம் அதிகமாக இருக்கும். அலுவலகத்தில் பணிபுரிபவர்களிடமிருந்து விரும்பிய ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு கிடைக்காததால் நீங்கள் மகிழ்ச்சியற்ற வராக இருப்பீர்கள். தேவையற்ற இடத்திற்கு இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வேலை செய்பவர்கள் தங்கள் வேலையை சரியான நேரத்தில் முடிக்க முயற்சிக்க வேண்டும், அதே வேளையில்

விதிகளை பின்பற்ற வேண்டும். பணியிடத்திலோ அல்லது தொழிலிலோ யாரையும் கண்மூடித் தனமாக நம்புவதைத் தவிர்க்க வேண்டும். வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வரி தொடர்பான வேலைகளை சரியான நேரத்தில் முடிக்க முயற்சிக்க வேண்டும். உறவுகளைப் பொறுத்தவரையிலும் ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கப் போகிறது. துணையுடன் ஏதாவது ஒரு வி'யத்தில் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். சிறந்த ஆரோக்கியத்தையும் உறவுகளையும் பராமரிக்க சிறப்பு கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

## கும்பம்



மார்ச் மாதம் சாதமாக இருக்கும். எவ்வளவு நேர்மையாக உழைத்து முயற்சி செய்கிறீர்களோ, அவ்வளவு அதிக பலன்களைப் பெறுவீர்கள். வெளிநாட்டில் ஒரு தொழில் அல்லது தொழிலைத் தொடர முயற்சித்துக்கொண்டிருந்தால், இந்த மாதம் உங்கள் விருப்பம் நிறை வேறக்கூடும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். பணியில் உள்ளவர்களின் மரியாதை அவர்களின் பணியிடத்தில் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளிட மிருந்து உங்களுக்கு ஆதரவு கிடைக்கும். இலக்குகளை அடைவீர்கள். நீதிமன்றம் தொடர்பான வி'யங்களில் உங்களுக்கு பெரிய நிவாரணம் கிடைக்கும். வணிக ரீதியாகவும் உங்களுக்கு முற்றிலும் சாதகமாக இருக்கும். விஷயாபாரத்தில் லாபமும் முன்னேற்றமும் ஏற்படும்போது நீங்கள் மகிழ்ச்சியாக உணர்வீர்கள். மார்ச் மாதத்தில் உறவுகள் சாதகமாக இருக்கும்.

## மீனம்



மார்ச் மாதம் கலவையான பலன்களைத் தரும். திட்டமிட்ட பணிகளை முடிக்க கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். வேலை தொடர்பாக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும். வேலையில் உள்ள அனைத்து வழிகாட்டுதல்களையும் பின்பற்றி உங்களால் முடிந்ததைச் செய்ய முயற்சித்தால், மாதத்தின் பிற்பகுதியில் சூழ்நிலைகள் சாதகமாக மாறுவதைக் காணலாம். வணிகர்களுக்கு கலவையாக இருக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்காததால் உங்களுக்குள் ஏமாற்றம் ஏற்படக்கூடும். சந்தையில் சிக்கித் தவிக்கும் பணத்தை திரும்பப் பெறுவதில் சிக்கல்கள் இருக்கலாம்.மாதத்தின் பிற்பகுதியில் கூட நீங்கள் வணிகத்திலிருந்து சராசரி லாபத்தைப் பெற வாய்ப்புள்ளது.



## நட்டி நடராஜ், ஸ்ரீகாந்த் இணைந்து நடிக்கும் கிரைம் திரில்லர் படம் சம்பவம்.

நட்டி நட்ராஜ், ஸ்ரீகாந்த் இருவரும் சம்பவம் என்ற படத்தில் இணைந்து நடித்திருக்கிறார்கள். இதில் முக்கிய கதாபாத்திரத்தில் ரங்கராஜ் பாண்டே நடிக்க மற்றும் சாந்தினி தமிழரசன், ஸ்மிதா, சிங்கம் புலி, சரவண சுப்பையா, ஜே.எஸ். கே.சதீ'குமார், எல்.ராஜா, கயல் தேவராஜ், விஜய் டிவி முல்லை, காதல் சரவணன், அஸ்மிதா, ஜெயந்தி மாலா, பேபி ஜனனி ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தை இயக்குனர் ஏ.வெங்கடேஷிடம் உதவி இயக்குனராக இருந்த பி.ரஞ்சித்குமார் கதை, திரைக்ததை, வசனம் எழுதி, இயக்கி உள்ளார். மைனா, சாட்டை போன்ற படங்களின் மூலம் தேசிய விருது பெற்ற 'ஷாலோம் ஸ்டுடியோஸ் ஜான் மேக்ஸ், ஜே.கே.டி மூவிஸ் ஜெசிகா இணைந்து தயாரித்துள்ளனர்.

இந்த படத்துக்கு சுந்தர் சி பாபு இசையமைத்துள்ளார். கபிலன் முருகானந்தம் மற்றும் இயக்குனர் p.ரஞ்சித்குமார் பாடல்களை எழுதியுள்ளனர். படத்தொகுப்பை சந்திரகுமார் கவனிக்க, இனியன் ஜே ஹாரிஸ் ஒளிப்பதிவு செய்துள்ளார். நடனத்தை நோபல் மற்றும் ஆண்டோ கவனிக்க, சண்டை பயிற்சியை ராஜசேகர் செய்துள்ளார்.

இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. எதிர்பாராத திருப்பங்கள் கொண்ட க்ரைம் - திரில்லர் கதையும்சம் உள்ள படமாக உருவாகியுள்ள சம்பவம் திரைப்படம் விரைவில் திரைக்கு வருகிறது.

பார்க்க ரசிக்க

சினிமா படங்கள் குறும்படங்கள் ஆல்பம் பாடல்கள் சினிமா பாடல்கள்

சினிமா ஆடியோ விழாக்கள்

பிரபலங்களின் பேட்டிகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் காண

அச்சாரம் tv @ SKRN MEDIA (you tube channel)








SKR MEDIA

SUBSCRIBE LIKE SHARE

சிறுகதை

## ஊமச் சோசியரு!

-திருமங்கலம் எஸ்.வி.இராஜசேகரன்

காலேசுல என்னமோ ட்ரைக்காம். லீவு விட்டதுனால, சங்கர் ஊருக்கு வந்துட்டான்.

அவக அய்யா வேலுச்சாமி இல்லாத வீடே, வெறிச் சோடிப் போய்க் கிடந்துச்சு. அம்மாவையும் தங்கச்சிகளையும் பாத்துப் பாத்து மனசுக்குள்ளயே அழுகுறான்.

ஆபிசுக்கு வேலைக்குப் போன அவக அய்யா, திடீர்னு செத்துப் போனதை நெனைக்க நெனைக்க, பயமா இருந்துச்சு.

அவரு, அஞ்சு பைசா யார்ட்டயும் லஞ்சம் வாங்க மாட்டாரு. நேர்மையா இருக்கணும்னு நெனப்பாரு. அவருக்கு எந்த வியாதியும் கெடையாது. பெறகு எப்படி நின்ன நிக்கச் செத்துப் போனாரு.

யாரும் மருந்து வச்சுட்டாய்ங்களோ... செய்வெனை செஞ்சுட்டாய்ங்களோ... அவருக்கு யாருமே புடிக்காதவங்க இருக்க மாட்டாய்ங்களே... நல்ல மனுசனே.

நெனச்சு நெனச்சு அப்புராணிப் புள்ளக்கு, நெஞ்சு வலிக்குது.

சாப்புடுற சோத்துல மருந்து வச்சுருப்பாய்ங்க. கேரளாவுல போய், மந்துரவாதிட்ட ரூவா குடுத்து, செய்வினை செஞ்சுருப்பாய்ங்க. நம்ம செவகாசிக்குப் பக்கத்துலருக்க, நெறமதிங்கிற ஊருல, தாயத்து மந்துருச்சுப் போட்ருப்பாய்ங்க.

அப்புடின்னு, ஆளாளுக்கு ஒன்னைச் சொல்றாய்ங்க.

சங்கருக்கு அதெல்லாம் சரியாப் படலை. நம்ம அய்யாவுக்கு அப்புடி யாரு நம்மூர்ல கெடுதல செய்வாய்ங்க. வேல பாத்த எடத்துல எதுவும் பெரச்சனையோ...

ராசா கெனக்கா அன்னைக்கு வேலைக்குப் போனாரு... திடீர்னு செத்துப் போனாருன்னு அங்கருந்து கோழி கூப்புட கொண்டு வந்துட்டாய்ங்களே...

நெனைக்க நெனைக்க, ஈரக் கொலயே பதறுது.



எப்படில்லாம் புள்ளைகளை வளத்தாரு.

சங்கரு, தல நாளையில பெறந்ததுனால, "யெய்யா... சாமீ"ன்னு, அம்புட்டுப் பிரியமா இருப்பாரு.

செல்லமா வளத்தாரு. வேணும்ங்கிறதெல்லாம் வாங்கிக் குடுத்தாரு. சும்மா சொல்லக் குடாது. பொம்பளப் புள்ளைக மேலயும், மனுசன் அம்புட்டுப் பாசமாக் கெடப்பாரு.

வாரா வாரம் ஊருக்கு வரும் போது, பழம், பிஸ்கோத், பென்சிலு, பேனா, அழி ரப்பர், நோட்டுன்னு, அள்ளிக் குமிச்சுருவாரு.

அழகுபட்ட மனுசன். அய்யமாரு மாதிரி செக்கச் செவேர்னு இருப்பாரு.

"வேலுச்சாமி... எய்யா... வேலுச்சாமி..."ன்னு, சாதி வித்யாசம் பாக்காம, அந்த ஊராளுக அம்புட்டுப் பேரும், அவுருமேல கொள்ளப் பிரியமாக் கெடப்பாக.

"நம்ம வேல்ச்சாமி மகென் லீவுக்கு வந்துருக்கு"ன்னு, ஊராளுக அஞ்சாறு பேரு சங்கரைப் பாக்க வந்தாக.

"யெய்யா... ராசா... என்னா சாமி இப்புடி எளச்சுப் போயிட்ட... எதும் நெனக்காத... நாங்கள்லாம் இருக்கம்ல. அய்யாவ மாரி நல்லாப் படி... அவரு வேலய வாங்கிரனும்... அம்மாவையும் தங்கச்சிகளயும் நீதான காப்பாத்தனும் சாமி..."

ஊர்க்காரக வாஞ்சயோட பேசுனதக் கேட்டு, எல்லாருமே மூசு மூசுன்னு அழுதாக.

வேலுச்சாமி, அப்படி நல்ல பேரு வாங்கிருந்தாரு அவுககிட்ட.

அப்பத்தேன் ஒருத்தரு கமுக்கமாச் சொன்னாரு.

”யெய்யா... சங்கரு... நம்ம அய்யாவுக்கு யாராச்சும் செய்வென செஞ்சுட்டாய்ங்களாய்யா?”

சங்கருக்கு வயித்தக் கலக்குச்சு.

”நீ வேற... நம்ம வேலுச்சாமிக்கு அப்புடி யாருய்யா கெடுதலை செய்வா?” - குரு ஆசாரி வீட்டு அப்பத்தா, அழுதுகிட்டே கேட்டாக.

”நல்லா கல்லுக் கெணக்கா, வத்தலக்குண்டுக்கு வேலைக்குப் போன மனுசன், திடுதிப்னு செத்துப் போனார்னா, என்னான்னே தெரியலயே...”

ரெண்டு மூனு பேரு, சந்தேகமாப் பேசுனாக.

அப்பத்தேன், தெக்கு வீட்டு பேச்சியம்மா, ஒரு விசயத்த சொல்லுச்சு.

”மருதையிலருந்து ஒரு ஊமச் சாமியாரு, நம்ம கொண்டயம்பட்டிக்கு வந்துருக்காரு... நல்ல சோசியம் சொல்றாராம். ஊரு சனம் பூராம் குமுஞ்சு போய்க் கெடக்கு, அந்தாளுட்ட சோசியம் பாக்க...”

ஊமச் சோசியரை, ரெண்டு நாளு கழுச்சு, சங்கரு வீட்டுக்கு கூப்ட்டு வந்தாக. வந்தவரு, வீட்டுக்குள்ள அடுப்பாங்கரை, மாட்டுக் கொட்டத்தை எல்லாம் போய்ப் பாத்தாரு.

மாலை போட்ருந்த, சங்கரு அய்யாவோட போட்டாவப் பாத்தாரு. முன்னடி வீட்ல ஒக்காந்து, சோழிய உருட்டிப் போட்டாரு.

”தம்பி... ஒங்க அப்பா எறந்தாலும், அவருக்கு மனசு ஆறல... இந்த வீட்டையே சுத்திச் சுத்தி வராரு...” - ஊமச் சோசியரு, கைய ஆட்டி ஆட்டி சைகயில சொன்னதும், எல்லாருமே, “கே...மா...“ன்னு அழுதுட்டாய்ங்க.

”அதுக்கு என்ன பரிகாரம் செய்யனும் சாமி?” - கூட்டத்துல யாரோ கேட்டாக.

”அவசரப்படாதீக... சொல்றேன்...” - சைகையில பேசுனாரு.

”அவரு தன்னால சாகலை... செய்வெனை செஞ்சு கொன்னுட்டாக... தாயத்து மந்துருச்சு, அடுப்புக்குப் பக்கத்துல பொதைச் சுருக்காக... நான் வீட்டுக்குள்ள நொழஞ்ச ஒடனேயே, எனக்கு கண்ணுக்குத் தெரிஞ்சுருச்சு...”

ஊமச் சோசியரு, சாடையில சொல்றதைக் கேட்டு, அங்கன ஒக்காந்துருந்தவக எல்லாம், அரண்டு போனாய்ங்க.

”யெய்யா... வேலுச்சாமி... ஒனக்கு செய்வெனை செய்ய, எப்படிய்யா மனசு வந்துச்சு? எறும்புக்கு கூட எரக்கப்படுவியே சாமி... ஒனக்கு ஆருய்யா, செய்வென செஞ்சது?” - பொம்பளைக அழுகுறாக.

ஊமச் சோசியரு, ஒரு கடப்பாறயக் கொண்டு வரச் சொல்லி, அடுப்பாங்கரைல ஒரு எடத்துல தோண்டி, மந்திரத்தைச் சொல்றாரு. பூவைப் போடுறாரு. ஊதுபத்தி, சாம்புராணி போடுறாரு. குழிக்குள்ள கைய விட்டு, இத்தினிக்கானும் ஒரு தாயத்தை எடுக்குறாரு.

”இந்தா பாருங்க... ஒங்க அய்யா சாகணும்னு மந்துருச்சு வச்ச தாயித்து...”

சொல்லி முடிக்கு முன்ன, பொம்பளைகள்லாம் நெஞ்சுல அடிச்சுக்கிட்டு அழுகுறாக.

”எஞ்சாமி... ஒங்களுக்கா இப்புடிச் செய்வாக?” - அழுதுகிட்டே சங்கரு அம்மா மயக்கம்போட்டு விழுந்துருச்சு.

அப்பத்தேன் சங்கரு சித்தப்பா, சோசியர்ட்ட கேட்டாரு.

”சாமி... இந்த பாதகத்தை செஞ்சது யாரு? அது எங்களுக்குத் தெரிஞ்சாகனும்...”

கொஞ்சநேரம் கண்ணை மூடிக்கிட்டு, ஏதோ யோசிக்கிறாரு.

”பக்கத்து வீட்டுக்காரரு வச்சுருக்காரு... அவரு மக கல்யாணப் பெரச்சனைல, ஒங்க அண்ணன் தலக் குடுத்து, ரெம்ப பெரச்சனை பண்ணதுனால, இப்புடிச் செஞ்சுருக்காக...” - கையக் கைய ஆட்டி, சைகையிலயே குண்டத் தூக்கிப் போட்டாரு சோசியரு.

”நெனச்சேன்... இப்புடித்தேன் இருக்கும்னு...” - அதுல ரெண்டு பேரு பேசுனாக.

சங்கருக்கு நம்பவும் முடியல, நம்பாம இருக்கவும் முடியல.

நம்ம அய்யாவுக்கு இப்புடிச் செய்ய, யாருக்கு மனசு வரும்... ரெண்டாவது, பக்கத்து வீட்டுத் தாத்தா, ரொம்ப நல்ல மனுசன். நாயமாப் பேசுவாரு. தப்பான காரியம் செய்யவே மாட்டாரு. ஆனா, நம்ம அய்யா திடுதிப்புன்னு எப்புடிச் செத்தாரு...

மனசு பூராம், ஒரே குழப்பம்.

சோசியருக்கு ரூவா, தானியம் தவசம் குடுத்து அனுப்புனாக.

அன்னைக்கு ராத்திரி, யாரும் சரியாவே தூங்கல.

ஊரு பூராம் இதேன் பேச்சு.

”நம்ம வேலுச்சாமிக்கு செய்வினை செஞ்சு கொன்னுட்டாய்ங்க...”

மக்கியாநாளு காலைல, பக்கத்து வீட்ல, “அடிரா... ஒதைரா...“ன்னு, ஒரே காட்டுச் சத்தம்.

ஊராளுக பூராம் குமிஞ்சுட்டாய்ங்க.

பக்கத்து வீட்டுக்காரக கூட, வேல்ச்சாமி வீட்டாளுக ரெம்ப நாளா பேசமாட்டாக. அது ஒரு பெரச்சனை. அத சாவாசமா பேசுவோம்.

சன்னல் வழியா சங்கரு, லேசா எட்டிப் பாத்தான்.

ஊமை சோசியரு, ”அய்யா... மன்னிச்சுருங்கய்யா... தெரியாமச் செஞ்சுட்டேன்...”ன்னு, கையெடுத்துக் கும்புட்டு, கத்திக் கதறிக்கிட்டு, பக்கத்து வீட்டுக்குள்ளருந்து வெளிய ஓடியாந்தாரு.

ஊமை சோசியரு பேசுறாரேன்னு, சங்கர் வீட்டாளுகளும், ஊராளுகளும் யோசிச்சாக.

உள்ள என்னா நடந்துச்சு, ஏது நடந்துச்சுன்னு, ஒரு சனத்துக்கும் தெரியல.

சோசியரு பயந்துக்கிட்டே, கொண்டையம்பட்டி பக்கம் வேகமா ஓடுனாரு.

பின்னாலயே ரெண்டு பேரு, அந்தாள அடிக்கப் போனாய்ங்க.

”யேய்... விட்ருங்கப்பா... சனியன் போய்த் தொலையட்டும்...”னு, பக்கத்து வீட்டுப் பெரியவரு அதட்டுனாரு.

என்னன்னே புரியல.

ஊமச் சோசியரு பக்கத்து வீட்டுக்கு எதுக்குப் போனாரு, என்ன சொன்னாரு, எப்புடிப் பேசுனாருன்னு, யாருக்குமே பொலப்படல.

”இதெல்லாம் இந்த சோசியருக்குத் தேவயா... பெரிய மனுசன்ட்ட போயி இதெல்லாம் சொல்லலாமா... அவரு மூணாத்து மலையில, எஸ்டேட்டுல கங்காணியா இருந்து, நூறு பேர மேச்சவரு... நாயமான ஆளு... அவர்ட்ட இந்த நாயி பப்பு வேகுமா... நேத்து... அப்புராணி வேல்ச்சாமி குடும்பத்த, என்த்தையோ சொல்லி ஏமாத்திட்டான்... ஆனா இவரு, ஓடுரா நாயேன்னு பத்திவிட்டாரு...”

ரெண்டு மூணு பேரு, பொலம்பிட்டே போனாய்ங்க.

பக்கத்து வீட்டுக்காரரு, வேல்ச்சாமியோட சின்னய்யாதேன். ஒன்னுக்குமில்லாத பிரச்சனைய ஊதி ஊதிப் பெருசாக்கி, ரெண்டு குடும்பத்துக்கும் நடுவுல, பெரிய விவகாரமாப் போச்சு.

அன்னந் தண்ணி பொழங்காத அளவுக்குப் போயிருச்சு.

அந்த நேரம் பாத்து, சூசுவான்னு இருந்த வேல்ச்சாமி, வேலக்குப் போன எடத்துல நின்னநிக்க செத்துப்போனாரு.எ

எப்படிச் செத்தாரு, என்னான்னு ஒருத்தனுக்கும் ஒன்னுமே புரியல.

அப்பத்தேன் வந்து, வேல்சாமிக்குப் பக்கத்து வீட்டுக்காரரு செய்வெனை செஞ்சுட்டார்னு, ஊமைச் சோசியரு சொல்லி, வீட்டுக்குள்ள அடுப்பாங்கரையில, ஒரு தாயத்தையும் எடுத்துட்டாரு. இது ஊரு பூராம் தீயாப் பரவிருச்சு.

“வேல்ச்சாமிக்கு இப்புடிச் செய்யலாமா... இப்புடிச் செய்யலாமா...“ன்னு, ஊருச் சனம் பூரா வாயாருச்சு.

”பக்கத்து வீட்டுக்காரரு நாயத்துக்கு கட்டுப்பட்ட மனுசன்... நீதிமான்... அவரு இப்புடிச் செய்வாரா... தாயலி... இந்த எடுபட்ட ஜோசியக்காரப் பய, ஒன்னுக்கு ரெண்டா சொல்லிட்டானே“ன்னு, நாலு சனம் பேசுது.

சாயந்தரம் போல, சங்கரு தாய் மாமா தருமர் வாத்யாரு, வேல்ச்சாமி வீட்டுக்கு வந்தாரு.

தருமரு வாத்யாரு கூடப் பெறந்த அக்காவத்தேன், வேல்ச்சாமி கட்டிருந்தாரு.

வேல்ச்சாமி தங்கச்சிதேன், தருமரு வாத்யாரு சம்சாரம்.

”வாங்கய்யா தருமரு... என்னா ரெண்டு நாளா ஆளவே காணம்?” - அக்கா வாஞ்சையோட தம்பியக் கேட்டுச்சு.

”பரிச்சை பேப்பரு திருத்த, மதுரைக்கு போய்ட்டேன்க்கா. ராத்திரித்தேன் வந்தேன்...”

மஞ்சப் பைக்குள்ளருந்து, கருப்பட்டிச் சேவு, அல்வா, சிலேபி எடுத்துக் குடுத்தாரு.

எப்ப வந்தாலும், கைநெறய தீமண்டம் வாங்கியாருவாரு.

”என்னாக்கா... நேத்து என்னமோ, நம்ம வீட்டு அடுப்படில தாயத்து எடுத்தாய்ங்களாம்ல...”

ஊமச் சோசியர் வந்ததுலருந்து, நடந்ததப் பூராம், தம்பிக்கு ஒன்னுவிடாம, தாயும் மகனும் சொன்னாய்ங்க.

”பாட்டைய்யா அப்புடிச் செய்ற ஆளுல்லயேக்கா...”

”ஆமா தருமரு... பாட்டய்யாவப் பத்தி நமக்குத் தெரியாதா... அந்த சோசியக்காரன் என்னத்தையோ சொல்லிப்போட்டுப் போயிட்டான்... மனசே சரியில்ல...” - அக்கா அழுதுச்சு.

அதுங்குள்ளயும், தருமரைப் பாத்துட்டு, வேல்ச்சாமி தம்பி தங்கராசும், வீட்டுக்குள்ள வந்தாரு.

”மச்சான்... என்னா பிரச்சனை... ரெண்டு மூணு நாளா மீனாச்சிபுரமே அரண்டு போய்க் கெடக்கு...”

”ஆமா தருமரு... ஊமச் சோசயிரு, நம்ம வீட்டுக்கு முந்தா நாளு வந்தான்... இப்படிக்கிப்டி சங்கதின்னு சொல்லி, தாயத்தை தோண்டி எடுத்தான்... இன்னைக்கு காலையில, மலைக்காரச் சின்னையாட்ட போயிருக்கான்...”

”இந்தாளு அங்க எதுக்குப் போனான் மச்சான்?”

”நம்ம வீட்டுக்கும், சின்னையா வீட்டுக்கும் சடவு, பெரச்சனைன்னு, எப்புடியோ இந்த தாயலி மோப்பம் புடிச்சுட்டான்... அவருட்ட போயி, “ஒங்க வீட்ல, மாட்டுக் கொட்டத்துல, மந்துருச்ச தாயத்தை பதிச்சு வச்சுருக்காய்ங்க...“ன்னு, கை சாடைலயே சொல்லிருக்கான். அவரும் ஒன்னுமே தெரியாதமாரி, “அப்புடியா... எதுக்கு வச்சுருக்காய்ங்க... யாரு வச்சது...“ன்னு கேட்ருக்காரு. அந்தாளு ஒடனே, நம்மவீட்டக் காட்டி, “உங்க பங்காளி வேல்ச்சாமி மகன்தேன் வச்சுருக்கான்...“னு, கூசாமச் சொல்லிருக்கான். “அடப்பாவிப்பயலே... என் புள்ளை அப்புடிச் செய்றவனா?“ன்னு, மலைக்காரச் சின்னையா, கோபப்படாம, நெதானமாக் கேட்டாராம்.

”மந்திருச்ச தாயத்தை, எதுக்கு இங்க வைக்குறாக?”

”ஓங்க வீட்ல யாராச்சும் துள்ளத் துடிக்க சாகுறதுக்கு...”

செருப்பைக் கைல எடுத்துட்டு, அந்த சோசியக்காரன அடிக்கப் போய்ட்டாராம்.

”தாயலி... நீ நேத்து பேரையூர் பஸ்டாண்ட்ல, கௌப்கடையில, பொரட்டா, சால்னா குடுங்கன்னு, வாயைத் தொறந்து பேசிக் கேட்டத நானே பாத்தேன்... இங்கன வந்து, ஊம மாரியாடா வேசம் போடுற? நான், என் புள்ளைக, என் பங்காளிகன்னு, யாருமே எங்க எதிரிக்கும் மனசாலகூட கெடுதல் நெனைக்காத வம்சம்டா... வக்காலோளி... நாங்க தாயத்து மந்துருச்சு வைக்கிறோமாக்கும்... கொன்னு குழியத் தோண்டிருவேன்... மரியாதயா ஓடிப் போயிரு...”ன்னாராம்.

கொளுந்தன் தங்கராசு சொல்றதைக் கேட்டுட்டு, ”பாட்டைய்யா... நீங்க நல்லாருக்கனும். நம்ம கல்லுப்பட்டி சாமி புண்ணியத்துல, நூறு வருசம் நீங்களும் ஒங்க புள்ளைகளும் ஆயுசோட இருக்கனும்...”னு, அழுதுக்கிட்டே கையெடுத்துக் கும்புடுது, சங்கர் அம்மா.

# அச்சாரம்

ACCHARAM

பன்முக மாத இதழ்
Tamil Monthly

வ.எண். ______

## பத்திரிகை சந்தாதாரர் படிவம்

Passport Size Photo

பெயர் __________________ த.பெ. __________________

நிரந்தர முகவரி ______________________________________

______________________________________

பாலினம் __________ தொழில் ____________________

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்காணும் விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் அச்சாரம் பத்திரிகைக்கு (ஆயுள்/ஆண்டு) // சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் எனக்கு பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## சந்தா கட்டண விபரம்

| | | | ✔ |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | - | ரூ.5,000/- | ☐ |
| பத்தாண்டு சந்தா | - | ரூ.2,500/- | ☐ |
| ஆண்டு சந்தா | - | ரூ.250/- | ☐ |
| நன்கொடை | - | ரூ. | ☐ |

**பத்திரிகை அனுப்ப வேண்டிய முகவரி**

திரு/திருமதி ______________________________________

______________________________________

______________________________________

______________________________________

தொலைபேசி எண் __________ கைப்பேசி __________ இ.மெயில் __________

நாள்:

இடம்: சந்தாதாரர் கையொப்பம்

படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை ஆசிரியர், அச்சாரம், SF1 இரண்டாம் தளம் 5/18 அண்ணா காலனி விருகம்பாக்கம் சென்னை-600092 என்கிற முகவரிக்கு அனுப்பவும். டிடி அல்லது காசோலைகளை அச்சாரம் என்கிற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களுக்கு பின்னர் பணம்பெற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**வங்கி கணக்கு விவரம்:**

ACCHARAM - Current Account
Acc.No: 6565766161
Indian Bank, Saligramam Branch
IFS Code: IDIB000S082

# உலக சினிமா - முத்து வேல்




அடு (Adu - Spanish movie)

வாழ்க்கை என்பது சாகசங்கள் நிறைந்த ஒன்று தான், அந்த சாகசங்களை நாம் சந்தோசமாக விரும்பி ஏற்கிறோமா அல்லது கடினமான சூழலை கடக்க,இந்த வாழ்க்கையை வாழ்வதற்கு ஏற்று கொள்கிறோமோ என்பது தான் இங்கே உள்ள கேள்வி.

முதல் காட்சியே நம் மனதை உறைய வைத்துவிடும்,இரண்டு நாடுகளுக்கு இடைய உள்ள மிகப்பெரிய உயரமுடைய இரும்பு வேலியை கடக்க நினைப்பவர்கள் அதில் ஒருவர் இறந்து போகிறார் அதில் இருந்து துவங்கும் கதை,

அப்படியே Adu என்ற சிறுவனை நோக்கி வருகிறது. ஆப்பிரிக்காவில் வாழும் Adu என்ற சிறுவனும், Alika அவனுடைய சகோதரியும் சுதந்திரமாக தன் சொந்த மண்ணில் சுற்றித்திரிய, இவர்களுக்கு தூரத்தில் துப்பாக்கி சூடும் சத்தம் கேட்க, சத்தம் வந்த திசையில் இவர்கள் இருவரும் போய் மறைந்திருந்து பார்க்க.சிலர் சட்டவிரோதமாக யானைகளை கொன்று அதன் தந்தத்தை வெட்டி எடுப்பவர்களை பார்க்கின்றனர். பயத்தில் தங்களுடைய சைக்கிளை அங்கேயே விட்டுட்டு அங்கிருந்து தப்பித்து வீடு வருகின்றனர், அந்த சைக்கிளை வைத்து அவர்களை தேடி அவர்கள் வீட்டுக்கு வரும் அந்த கும்பல் அவர்களுடைய அம்மாவை சுட்டு கொன்று இவர்களை தேட,இவர்கள் அங்கிருந்து தப்பித்து சட்டவிரோதமாக ஸ்பெயினுக்கு போக முடிவு செய்கின்றார்கள். பணம் இல்லை சட்டவிரோதமாக தப்பித்து செல்ல நினைக்க அதில் சில பிரச்சனை வருகிறது. parisக்கு இவர்களை விமானத்தில் போகுமாறு சொல்லி விமான நிலையத்தின் சுற்று சுவர் வெளியே விட்டுட்டு பணத்தை ஏமாற்றி சட்டவிரோமாக கூட்டி செல்லும் ஒருவன் ஓடிவிடுகிறான்.

இவர்கள் விமானத்தில் போகும் காட்சி தான் நம் மனதை பதற வைக்கும், சிறுமி, சிறுவன் இருவரும் விமானத்தின் சக்கரம் இருக்கும் இடத்தில் உட்கார்ந்து கொண்டு பயணிக்க, குளிர் அதிகமாக இருக்க தம்பியை காப்பற்ற மொத்த துணியையும் அவனுக்கு போற்றி விடுகிறார். குளிர் தாங்க முடியாமல் ஒரு கட்டத்தில் உறைகுளிரில் Alika மூச்சு பேச்சு இல்லாமல் போக,சக்கரம் திறக்க மேலே இருந்து காற்றில் பறந்து கடலில் விழுகிறாள், இதற்கு பிறகு தான் படம் ஆரம்பிக்கும்.

Massar என்ற ஒரு இளைஞன் கதாபாத்திரம் நமக்கு மிகப்பெரிய மனவேதனையையும், விடமுயற்சியுடன் எப்படியாவது வாழ வேண்டும் என்ற தன்னம்பிக்கையும் கொடுக்கும் கதாபாத்திரம், Aduவிற்காக அவன் செய்யும் வேலைகள் எல்லாம் நம்மையும் அறியாமல் அழுகையுடனும், நீயெல்லாம் கஷ்டத்தை பற்றி பேச தகுதியே இல்லாதவன் என என்னை பார்த்து கேட்பது போல இருந்தது. யுனரவை பல இடங்களில் கங்காரு தன்

குட்டியை பார்த்து கொள்வது போல பார்த்து கொள்வான்.

ஒரு காட்சியில் அவன் கண்ணுக்கு தெரியும் நகரத்தை பார்த்து கண்ணீர் விட்டு அழும் இடம், எல்லாம் இழந்து விட்டோம் வாழ வழியில்லை, பணம் அது தானே எல்லாம். இனி எப்படி ஒரு அமைதியான சந்தோசமான வாழ்க்கையை எப்போது வாழ போகிறோம், இப்படி எவ்வளவு நாட்கள் தான் கடினமான சூழல்களில் வாழ்வது, நமக்கான Hope யார் என உடைந்து அழும் இடமும், கடைசியாக Aduit massar இடம் இருந்து இந்த சட்டமும், சர்வாதிகாரம் எப்படி பிரிக்கிறது, எப்பொழுதும் ஏன் இல்லாதவர்கள் மீது கருணையற்று நடந்து கொள்கிறது என்பதை நினைக்கும் போதும் மன உளைச்சலும், பெருங்கோபமும் வருகிறது.




இந்த வாழ்க்கையை வாழ்ந்தாக வேண்டுமே இன்னும் பல யுனரக்களும், massarகளும், Alikaவும் வாழ்ந்து கொண்டும், தாங்கள் இந்த பூமியில் ஒரு இடத்தில் உட்கார்ந்து சுதந்திரத்துடன் பெருமூச்சு விட ஓடிகொண்டு தான் இருக்கின்றனர். அதில் தோல்வி அடைந்து இறந்தும் போகின்றனர்.

தன் நாட்டில் அகதிகளாக தினம்தினம் வறுமையில், பாதுகாப்பற்ற சூழலில், தங்கள் மீது அந்த அரசு செலுத்தும் வன்முறைகளை பொறுத்து கொள்ள முடியாமல் தினமும் இங்கே செத்து வாழ்வதை விட,வளம் கொண்ட நாட்டில் குப்பை அள்ளியோ, கழிவறையை கழுவியோ எப்படியாவது வாழ்ந்து விடுவோமே என்று துணிந்து நாட்டின் எல்லையை சட்டவிரோதமாக கடக்கும் மரண பாதையை கடந்து பார்த்து வெற்றியோ, தோல்வியோ நமக்கான ஒரு அமைதியான தன்னுடைய குடும்பத்தை காப்பாற்றி கொள்ளலாம் என போராடும் மக்களின் கதை இது.

இன்றைய இளைய தலைமுறைகள் கட்டாயம் பார்க்க வேண்டிய படம் இது. நெட்ப்ளிக்ஸ்ல் கிடைக்கிறது.



இயக்குநர் விஜய்யின் புதிய போஸ்ட் புரொடக்ஷன் ஸ்டுடியோவினை (D Studios Post) இயக்குநர்கள் பிரியதர்ஷன், பி.சி. ஸ்ரீராம், டாக்டர் ஐசரி கே கணேஷ் & சுரேஷ் பாலாஜி ஆகியோர் தொடங்கி வைத்தனர்!

ரசிகர்கள் விரும்பும்படியான பல வெற்றிப்படங்களைக் கொடுத்த இயக்குநர் விஜய் D Studios Post என்ற பெயரில் புதிய போஸ்ட் புரொடக்ஷன் ஸ்டுடியோவினை மார்ச் 2 அன்று தொடங்கியுள்ளார். இந்த ஸ்டுடியோவை இயக்குநர் பிரியதர்ஷன், ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் & வேந்தர் டாக்டர் ஐசரி கே கணேஷ் மற்றும் தயாரிப்பாளர் சுரேஷ் பாலாஜி ஆகிய பிரபலங்கள் தொடங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வு சென்னையின் மிகப்பெரிய போஸ்ட் புரொடக்ஷன் ஸ்டுடியோவின் பிரமாண்டமான தொடக்க விழா என்பது குறிப்பிடத்தக்கது. டிஐ, டால்பி அட்மாஸ் சவுண்ட் மிக்ஸ், டப்பிங், டிசிபி (DCP), ஓடிடி மாஸ்டரிங், விஎஃப்எக்ஸ் மற்றும் டிஐடி (DIT) ஸ்டோரேஜ் ஆகியவற்றிற்கான ஒரே இடமாக இந்த போஸ்ட் புரொடக்ஷன் ஸ்டுடியோஸ் உள்ளது. இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், திரைப்பட பிரபலங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டப் பலர் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

நிகழ்வுக்கு வந்த விருந்தினர்களை தயாரிப்பாளர் ஏ.எல். அழகப்பன் வரவேற்றார். இந்த ஸ்டுடியோவின் நிறுவனர் மற்றும் தலைவர் இயக்குநர் விஜய். ராஜகிருஷ்ணன், ஹெட் ஆஃப் சவுண்ட், ராஜசேகரன் விஷுவல் பிரிவின் தலைவராகவும், முத்துகிருஷ்ணன் குரல் பிரிவின் தலைவராகவும் உள்ளனர்.

'டி ஸ்டுடியோஸ் போஸ்ட்' அமைந்துள்ள இடம்: எண். 87/4, பிளாட் எண். 1A, 1B & 1D, சம்பு பிரசாத் அவென்யூ, சாலிகிராமம், சென்னை, தமிழ்நாடு - 600 093

# தயாரிப்பாளர் அன்புசெழியன் வெளியிட்ட "வருணன்- காட் ஆ்.ப் வாட்டர்"" திரைப்படத்தின் முன்னோட்டம்

"நீரின்றி அமையாது உலகு" எனும் டேக் லைனுடன் தயாராகி இருக்கும் இந்த திரைப்படம் வரும் 14ம் தேதி என்று உலகம் முழுவதும் திரை அரங்குகளில் வெளியாகிறது. இந்நிலையில் இப்படத்தின் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் படக்குழுவினருடன் தயாரிப்பாளர் அன்புச்செழியன், இயக்குநர் சத்ய சிவா, நடிகர் கிருஷ்ணா, "ஆஹா" டிஜிட்டல் தளத்தின் தலைமை செயலாக்க அதிகாரி கவிதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். கோபுரம் பிலிம்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரான தயாரிப்பாளர் அன்புச்செழியன் படத்தின் இசையை வெளியிட, படக்குழுவினரும், வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர்களும் பெற்றுக் கொண்டனர்.

தயாரிப்பாளர் கார்த்திக் ஸ்ரீதரன் அனைவரையும் வரவேற்று பேசுகையில், ""இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்து எங்களை அன்பு மழையில் நனைய வைத்த தயாரிப்பாளர் அன்புச்செழியன் அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். "வருணன்" திரைப் படத்திற்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து நட்சத்திர நடிகர்களுக்கும், நடிகைகளுக்கும், தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

படத்தின் திரைக்கதையை எழுதி நிறைவு செய்து விட்ட பிறகு எங்களையும் எங்கள் குழுவினரையும் இயக்குநரின் தந்தை தயாரிப்பாளர் அன்புச்செழியனிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். அவரிடம் முழு திரைக் கதையையும் சமர்ப்பித்தோம். அவர் முழுமையாக வாசித்து விட்டு, "கதை நன்றாக இருக்கிறது. தயாரிப்பது தொடர்பாக விரைவில் அறிவிக்கிறேன்" என்றார். இப்படி சொன்னவுடன் எங்களுக்கெல்லாம் நம்பிக்கை பிறந்தது. அவருடைய வழிகாட்டுதலால் தான் இன்று நாங்கள் இந்த மேடையில் நிற்கிறோம். இதற்காக அவருக்கு மீண்டும் ஒரு முறை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சிறிய முதலீட்டு திரைப்படங்களின் நிலை என்ன என்று அனைவருக்கும் தெரியும். இந்தத் தருணத்தில் எங்களுடைய படம் நன்றாக இருக்கிறது என்பதாலும், அவர் கொடுத்த வாக்கினை காப்பாற்றுவதற்காகவும் இந்த திரைப்படம் திரு. அன்புச்செழியனின் உதவியுடன் வெளியாகிறது. படத்தைப் பற்றி



பகிர்ந்து கொள்வதற்கு ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. இத்திரைப்படம் வரும் 14ம் தேதியன்று திரையரங்குகளில் வெளியாகிறது. அனைவரும் ஆதரவு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்," என்றார்.

ஸ்ரீதர் மாஸ்டர் பேசுகையில், ""இந்தப் படத்தினை விளம்பரப்படுத்தும் "ஆவ்சம் பீலு " பாடலுக்கான உருவாக்கத்தின் போது இணைந்து பணியாற்றியதற்காக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பாடல் காட்சியில் நடிகர் ஜெயப்பிரகாஷின் வாரிசான துஷ்யந்த் பிரகாஷ் அற்புதமாக நடனமாடி இருந்தார். இந்த பாடலுக்கான புரமோவை தமிழகம் முழுவதும் தயாரிப்பாளர் விளம்பரப் படுத்தி இருந்தார். ஒரு பாடலுக்கான ப்ரோமோவையே விளம்பரப்படுத்துவதற்கு கடின உழைப்பை கொடுத்திருக்கும் தயாரிப்பாளர், இப் படத்தினை அனைத்து மக்களிடத்திலும் கொண்டு சேர்ப்பதற்காக தொடர்ந்து உழைத்து வருகிறார். இந்தப் படத்தினை இயக்குநர் ஜெயவேல்முருகன் அற்புதமாக இயக்கியிருக் கிறார். திரையில் தோன்றும் போது ராதா ரவி போன்ற மூத்த நடிகர்களின் உச்சரிப்பு எங்களைப் போன்ற ரசிகர்களை வியப்பில் ஆழ்த்துகிறது. இந்த திரைப்படத்தில் இடம்பெறும் அனைத்து பாடல்களும் நன்றாக இருக்கின்றன. அனைவருக்கும் மிகப்பெரிய வெற்றி கிடைக்க வாழ்த்துகிறேன்.

தற்போது ஒவ்வொருவருடைய வீட்டிலும் தண்ணீர் கேன் இல்லாமல் இருப்பதில்லை. அந்த தண்ணீர் கேனை வீட்டிற்கு எடுத்து வரும் நபர்களுக்கும் ஒரு பின்னணி உண்டு. இது போல் அனைத்து தரப்பினரையும், ரசிகர்களையும் தொடர்பு கொள்ளும் தண்ணீர் கேனை பற்றிய படம் என்பதால் நிச்சயம் வெற்றி பெறும்,"" என்றார்.

# கவிதைக் கூடல்

## மழைத்தடம் சுமந்தவன்!

“நிழற்குடைக்குள் வா“ என்று
நான் வற்புறுத்துவதை
ஒரு பொருட்டாகவே கொள்ளாமல்
பேருந்து நிறுத்தத்தின்
பக்கவாட்டு வெட்டவெளியில் அமர்ந்தபடி
தொப்பலாய் நனைந்துகொண்டிருக்கும்
முதுவயது மனப்பிறழ்வாளன்
மழை விட்டபிறகும்
மழையின் தடத்தைச் சுமந்திருந்தான்.

-செ.விஜயன், சென்னை

## இயல்புக்குத் திரும்புதல்!

கைப்பேசி தொடுதிரை
புதிய எண்ணை ஒளிரவிடும்
ஒவ்வொரு முறையும்
அந்த அழைப்பை
ஏற்பதா வேண்டாமா என்ற
தயக்கத்துடன் கூடிய
சிறிது கால அவகாசத்தை
எடுத்துக் கொள்கிறேன்

சம்பிரதாய
“ஹலோ“ பகிர்தலுக்குப் பின்
தவறான அழைப்பு என்பதை
எதிர்முனை நாகரிகமாக
புரிந்து கொண்டு
அழைப்பைத் துண்டிக்க
பதட்டம் நீங்கி
இயல்புக்குத் திரும்புகிறேன்.

-மு.ஆதினி, சேலk;

## வலி கடத்தல்!

துடுப்பற்ற படகு ஒன்று
தனக்குள் உதிரும் இலைகளை
நதியின் போக்கில்
சுமந்து சொல்வதைப் போல
சிறியதும் பெரியதுமான
அடுத்தடுத்த வலிகளைக்
கடந்து போகிறேன்.

வி.நர்மதா, உளுந்தூர்பேட்டை

## கனவே துணை!

ஆழ்ந்த உறக்கத்தை
கலைத்துப் போடுகிறது
ஒரு கனா

எழ நினைத்தும் இயலாமல்
படுக்கையிலேயே அமிழ்த்துகிறது
ஒரு கனா

எல்லா கனவிலும் இருள்
அல்லது
அரிதியிட்டுக் கூறமுடியாத தொலைவு

எந்தக் கனவும்
முழுமை பெற்றதில்லை
கனவின் வருகையும் கலைதலும்
நேர வரையறைக்கு உட்பட்டதல்ல

தனித்த உறக்கம்
யாருக்கும் வாய்க்காது
எல்லார்க்கும் கனவே துணை.

-வி.முருகன், காஞ்சிபுரம்

(தொகுப்பு: -பாப்பனப்பட்டு வ.முருகன்)

Owned, Published and Printed by M.C.SEKAR Published from SF1, 2nd Floor, 5/10, Anna Colony, Virugambakkam, Chennai - 600 092. Printed at J.M.PROCESS at 22/49, Subedar hussain Street, Border thottam, Royapettah, Chennai - 600 014. Editor: M.C.SEKAR

# குறைந்த விலையில்

ஸ்ரீ பச்சையம்மன் துணை...

அரங்கூர் ஏரோபிளேன்

# S.R.நகர்

(சுசீலா – இராமசாமி)

தொழுதூர் To திட்டக்குடி ரோடு, பெரங்கியம் கிராமம்

அரசு அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு




| Plot No | Sq.ft | Cent |
|---|---|---|
| 1 | 1611.77 | 3.70 |
| 2 | 1247.50 | 2.86 |
| 3 | 1247.50 | 2.86 |
| 4 | 1247.50 | 2.86 |
| 5 | 1252.49 | 2.87 |
| 6 | 1444.74 | 3.31 |
| 7 | 1477.05 | 3.39 |
| 8 | 1421.15 | 3.26 |
| 9 | 1453.59 | 3.33 |
| 10 | 1497.00 | 3.43 |
| 11 | 1528.19 | 3.51 |
| 12 | 1553.14 | 3.56 |
| 13 | 1550.55 | 3.56 |
| 14 | 900.09 | 2.06 |
| 15 | 975.14 | 2.24 |
| 16 | 1040.40 | 2.39 |
| 17 | 1440.18 | 3.30 |
| 18 | 951.56 | 2.18 |
| 19 | 1011.40 | 2.32 |
| 20 | 1315.78 | 3.02 |
| 21 | 1325.30 | 3.04 |
| 22 | 1512.50 | 3.47 |
| 23 | 1516.96 | 3.48 |
| 24 | 1521.06 | 3.49 |
| 25 | 1729.00 | 3.97 |
| 26 | 1772.50 | 4.07 |
| 27 | 1796.25 | 4.12 |
| 28 | 1833.56 | 4.21 |
| 29 | 1869.50 | 4.29 |
| 30 | 1704.48 | 3.91 |
| 31 | 1611.50 | 3.70 |
| 32 | 1588.60 | 3.64 |
| 33 | 1593.80 | 3.66 |
| 34 | 1573.00 | 3.61 |
| 35 | 1560.00 | 3.58 |
| 36 | 1381.80 | 3.17 |
| 37 | 1442.24 | 3.31 |
| 38 | 1232.50 | 2.83 |
| 39 | 1237.50 | 2.84 |
| 40 | 1237.50 | 2.84 |
| 41 | 1235.00 | 2.83 |
| 42 | 1428.25 | 3.28 |
| TOTAL | 59869.49 | 137.32 |

தொடர்புக்கு : 7358310286 R.நவீன் ராமசாமி

ACCHARAM, Tamil monthly, March 2025 RNI No.TNTAM/2016/69258 R.Dis.No.610/2016
Date of publication 1st Every Month Postal Reg.No.TN/CC(S)DN/559/23-25
Poster at Pathrika channel Egmore Posted between 1-7 March 2025

